பக்கங்கள் 8 விலை சதம் 40

# ஈழநாடு
THE EELANAADU

மலர் 30 பங்குனி 23 ரபி அவ் 26 இதழ் 54
யாழ்ப்பாணம் புதன்கிழமை 5-4-78

லாலா சோப்
பிரகாச சலவை!
பளிச்சிடும் வெண்மை!
ஈழம் எங்கும் கிடைக்கும்
லாலா சோப் தொழிற்சாலை
அச்சுவேலி

## குமாரசாமிக்கு பேரவையில் அஞ்சலி

(கொழும்பு)
முன்னாள் சாவகச்சேரி எம். பி. திரு. வி. குமாரசாமிக்கு நேற்று தேசிய அரசுப் பேரவையில் அஞ்சலி தெரிவிக்கப்பட்டது.

அனுதாபத் தீர்மானம் ஒன்றை நீதியமைச்சர் திரு. கே. டபிள்யு. தேவநாயகம் கொண்டுவந்தார். இந்த இரங்கல் தீர்மானத்தின் மீது நல்லூர் எம். பி. திரு எம். சிவசிதம்பரம் குமாரசாமியின் இலட்சியப்பணிகளை விரிவாக எடுத்துக் கூறினார். 1947ம் ஆண்டு எம். பி யாக இவர் முதலில் தெரிவுசெய்யப்பட்டார். (ம)

### சன்சோனி கமிஷன் முன் சொய்சா தெரிவித்த கூற்றுக்கு

# பேரவையில் 'அமிர்' கிளப்பிய உரிமைப்பிரச்னை

(கொழும்பு)
தேசிய அரசுப் பேரவை நேற்றுக்கூடியபோது, எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் ஒழுங்கும் பிரச்னையொன்றைக் கிளப்பினார்.

யாழ்ப்பாணத்தில் நடைபெறும் சன்சோனி கமிஷன் முன், பாதுகாப்புப் படைகள் சார்பாக ஆஜராகி தொகுப்புரை நிகழ்த்திய சட்டத்தரணி திரு. ஏ. வி. டி. சொய்சா தெரிவித்திருந்த ஒரு கூற்று சம்பந்தமாகவே திரு அமிர்தலிங்கம் உரிமைப் பிரச்னையைக் கிளப்பினார்.

"பொலிஸ் வகுப்பொன்றில் உதவிப் பொலிஸ் மாஅதிபர் திரு. அன செனிவரத்ன, தமிழ்ப் பொலிஸாரிடமிருந்து தமிழர் கூட்டணியினர் நிதி வசூலிக்கின்றனர் என்று கூறியதாக, நான்பாராளுமன்றத்தில் தெரிவித்திருந்ததாக சட்டத்தரணி திரு. சொய்சா கடந்த மாதம் 21ம் திகதி சன்சோனி கமிஷன்முன் நிகழ்த்திய தொகுப்புரையில் குறிப்பிட்டுள்ளார். இதனை இங்கு சமர்ப்பிக்கும்பொருட்டு, கமிஷன் விசாரணைப் பிரதியொன்றை சட்டணம் செலுத்தி வாங்கி வந்துள்ளேன் சட்டத்தரணி திரு சொய்சாவின் இக்கூற்று பாராளுமன்ற சிறப்புரிமையையும், அதிகாரங்களையும் மீறுவதாக உள்ளது. காரணம், நான் இவ்விதமாக இடபாராளுமன்றத்தில் கூறவில்லை. நான் கூறியிருந்தால் 'ஹன்சாட்'டில் வெளிவந்திருக்கும். சட்டத்தரணி திரு. சொய்சா ஒரு பொறுப்புவாய்ந்த சட்டத்தரணி ஆனாலும் அவரது கூற்று இச்சபையின் உரிமையை மீறுவதாக உள்ளது" என்று எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் கூறினார்.

"நீங்கள் கிளப்பும் இப்பிரச்னைக்கு நீங்கள்தான் பொறுப்பாகவிருக்கவேண்டும்" என்று குறிப்பிட்ட சபாநாயகர், இதுசம்பந்தமாக முடிவு செய்வதை கமிட்டியிடமே ஒப்படைக்கின்றேன்' என்று தெரிவித்தார். (ம)

# மாகோசம்பவம்: எனது வீட்டை முற்றுகையிட்ட 2000 சிங்கள இளைஞர்கள்!

## பொலிஸார் மீட்ட இரும்புப் பெட்டியை பறித்துச்சென்றனர்"

— நமது நிருபர் கா. யோகநாதன் —

(யாழ்ப்பாணம்)

"மாகோவில் உள்ள எனது வீட்டை, 2000 சிங்கள இளைஞர்கள் முற்றுகையிட்டுத் தாக்கினார்கள். நான், பக்கத்திலுள்ள அபயசேகரவின் வீட்டுக்குள் பிள்ளைகளுடன் சென்றேன். அங்கும் வந்து, என்னை அடித்தார்கள்; உதைத்தார்கள்; வதைத்தார்கள். எனது பிள்ளைகள் தமிழ்ப் பிள்ளைகளாக இருந்தபோதிலும், எனக்கு அடி விழும்போது 'அப்பே தாத்த' என்று குளறினார்கள்."

"இதன் பின், அந்தச் சிங்கள இளைஞர்கள், "யாழ்ப்பாணத்தில் 1 000 சிங்களவர்களைக் கொன்றுவிட்டார்கள்; 3 சிங்களப் பெண்களைச் சுட்டுவிட்டார்கள்; சிங்கள மாணவிகளைச் சித்திரவதை செய்கிறார்கள். ஆதலால், தமிழர்களைப் பாதுகாத்து வைத்திருந்தால் உம்மைக் கொலைசெய்வோம்" என்று வீட்டுக்காரரைப் பயமுறுத்திவிட்டுச் சென்றனர். நாங்கள் அங்கிருந்து சென்றுவிட்டோம்."

இவ்வாறு, மாகோ, லிப்டன் தேயிலைப் பிரதிநிதி அருணசலம் சிவானந்தம், சன்சோனி கமிஷன் முன் சாட்சியமளிக்கையில் கூறினார். அவர் மேலும் கூறியதாவது:

### தமிழ்க் கடைகள் எரிக்கப்பட்டன

"தற்போது கொழும்பில் இருக்கிறேன். மாகோவில் லிப்டன் பிரதிநிதியாக நான் இருந்தேன். எனக்கு 4 குழந்தைகள். ஆகஸ்ட் 17ம் திகதி ஆனைமடுவுக்குச் சென்றேன் கலவரம் என்று அறிந்தேன். அங்கிருந்து புத்தளத்திற்கு வந்தபோது அனுராதபுரத்தில் தமிழ்க்கடைகள் உடைக்கப்பட்டதாக அறிந்தேன். அன்றிரவு 7 மணிக்கு மாகோவில் உள்ள கடைகள் எரிக்கப்பட்டன. என்வீடு தாக்கப்பட்டதும் வெளியேறினேன்.

### பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக

பொலிஸ் நிலையத்திலிருந்து 100 யார் தூரத்திலுள்ள ராஜா கடை உடைக்கப்பட்டது. பொலிஸ்நிலையத்திற்கு சென்றுவர என்கடை உடைக்கப்பட்டது.

உமது உயிர் தேவையென்றால் உள்ளேயிரு புகார் செய்வதானால் பிறகுவா என்று மாகோ இன்ஸ்பெக்டர் கூறினார்.

3 மணிக்கு கல்கமுவவிலிருந்து ஏ. எஸ். பீ. வந்தார் அவர் பஸ் ஏற்பாடு செய்வதாக கூறினார். பஸ்களை செலுத்த இராணுவ பொலிஸ் சாரதிகள் மறுத்தனர். இ. போ. ச. சாரதிகளும் பஸ்ஓட மறுத்தனர்; அப்போது நூர்தீன் லொறியில் வந்தார். அவரை கெஞ்சி மன்றாடினேன். அவர் வர சம்மதித்தார். பொலிஸ்நிலையத்தில் பொலிசார் வெளியில்இருந்து கதைத்தனர். சிங்கள இளைஞர்கள் பொலிஸ்நிலையத்தை முற்றுகையிட்டனர். பொலிசார் இளைஞருக்குப் பயந்தனர்.

### இரும்புப்பெட்டியை இளைஞர்கள் பறித்தனர்

"9 மணிக்கு ஒரு வியாபாரி பொலிஸ் இன்ஸ்பெக்டரிடம் வந்து தமது கடையில் இரும்புப்பெட்டி இருப்பதாக கூறினார். அதில் நகைகள் பணம் இருப்பதாகவும் சொன்னார். பொலிசாருடன் சென்று ஜீப்பில் அவர் இரும்புப்பெட்டியை ஏற்றிவந்தார். சிங்கள இளைஞர்கள் ஜீப்பை

[8-ம் பக்கம் பார்க்க]

"சாதி, மத பேதமற்ற

## சமதர்ம வாழ்வுதான் உண்மைச் சின்னம்!"

### தந்தை செல்வா நினைவு விழாவில் 'அமிர்'

(கொழும்பு)
தந்தை செல்வாவுக்கு அழியாத நினைவுச்சின்னம் ஒன்றை நிறுவுவதற்கான வேலைகளில் ஈடுபட்டிருப்பதாகவும், ஆனால் தமிழ்மக்களின் தாயகத்தில் சாதி மத பேதமற்ற சமதர்ம வாழ்வுதான் தந்தை செல்வாவுக்குத் தமிழ் மக்கள் எழுப்பக்கூடிய உண்மையான அழியாத சின்னமென்றும் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழர் விடுதலைக்கூட்டணியின் செயலாளர் நாயகமுமான திரு. அ. அமிர்தலிங்கம் வெள்ளவத்தை ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நேற்று முன்தினம் நடந்த தந்தை செல்வாவின் பிறந்ததினவிழாக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

முப்பது வருஷமாக தந்தை செல்வாவுடன் உறவாடிய தனக்கு அவரது சிந்தனையை நன்றாகத் தெரியுமென்றும் அவரது இலட்சியத்தை அடைவதைத் தவிர வேறு பாதையில் செல்ல முடியாதென்றும் திரு. அமிர்தலிங்கம் மேலும் சொன்னார்.

1972ம் ஆண்டில் தந்தை செல்வாவுடன் இந்தியாவுக்குச் சென்றது பற்றியும் கூட்டத்தில் நினைவூட்டிய திரு. அமிர்தலிங்கம்; சிங்களத் தலைவர்கள் தமிழ்மக்களை சிறுபான்மையினமாகக் கணித்துக் கூறிவந்தபொழுது தமிழ் மக்களை ஒரு தேசிய இனமாக உலகுக்கு அறிவித்தவர் தந்தை செல்வநாயகம்தான் என்றும் இந்தியத் தலைவர்களுக்கு தமிழ்தேசிய இனம் பற்றி தந்தை செல்வா விளக்கிக் கூறினாரென்றும் சொன்னார்.

### விஸ்வமடு அகதிகள்

# குடியேற்றத்தில் இறப்பு அதிகரிப்பு

## நித்தியானந்தாவுக்குப் புகார்

(யாழ்ப்பாணம்)
விஸ்வமடுவில், அரசாங்க அகதிகள் குடியேற்றத் திட்டத்தில், உணவு, நீர், சுகாதார வசதிகள் போதியளவு இல்லையென்றும் இதனால் பெருந்தொகையான அகதிகள் தொற்று நோயினால் பாதிக்கப்படுகிறார்கள் என்றும் அகதிகள் புனர்வாழ்வுச் சபைக்குப் புகார்செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக, இக்குடியேற்றத் திட்ட வாசிகள் அவசரத் தந்தி ஒன்றை அகதிகள் புனர்வாழ்வுச் சபையின் தலைவர் திரு. கே. சி. நித்தியானந்தாவுக்கு அனுப்பியுள்ளனர்

போதிய வசதிகள் இல்லாத காரணத்தினால் இக்குடியேற்றத் திட்டத்தில் இறப்பு விகிதம் அதிகரித்துள்ளதாகவும் இதற்கு நிவாரணமளிக்கக் கூடிய விதத்தில் உடன் ஆவன செய்யுமாறும் அத்தந்தியில் கேட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாகத் தாம் அரசுடன் தொடர்புகொண்டு உரிய நடவடிக்கை எடுக்க விரும்புவதாக திரு. கே. சி நித்தியானந்தா நமது நிருபரிடம் தெரிவித்தார். (இ)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

100 பரப்பு வயல்நிலம் தம்பிராசபுரத்தில் விற்பனைக்கு உண்டு. தொடர்புகொள்ளும் விலாசம் D சேனாதிராசா. 136, கச்சேரி நல்லூர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 8947

படுக்கை அறைகள், மூல் மண்டபம், வரவேற்பறை, இணைந்த ட்ரெயினேஜ் மலகூடம் மற்றும் சகல வசதிகளும் கொண்ட வீட்டுடன் ஒன்றரைப் பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: ராசாம்பத்தர் ஜுவலறி, 125, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 8939

### தேவை

அனுபவம் வாய்ந்த அச்சுக் கோப்பாளர், மெசின் மைண்டர் புத்தகங்கள் கட்டுவோர் (கைதர் பைண்டிங்) உடன் வரவும். தங்கராஜா அச்சகம், 89/3, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 8948

யாழ்ப்பாணத்திற்கும் பளைக்கும் இடையில் தார்றோட்டின் எல்லையில் தண்ணீர் வசதியுடன் அமைந்துள்ள இளம் தென்னம்பிள்ளைகளுடன் கூடிய 50 ஏக்கருக்குட்பட்ட தென்னந்தோட்டம் ஒன்று உடனடியாகத் தேவை. முழு விபரம் த. பெ. இல. 487, கொழும்பு. 8950

யாழ். நகர எல்லைக்குள் பிரதான வீதிகளில் 4 பரப்புக்குக் கூடியதாக உள்ள காணியுடன் அமைந்துள்ள வசதியான பெரிய வீடு ஒன்று உடனடியாகத் தேவை. முழு விபரம் த. பெ. 487, கொழும்பு. 8949

### கல்வி

"அளவையியல் சுருக்கம்" (பகுதி I) இரண்டே வாரங்களில் மிகத்துரிதமாக மீட்கலாம். கிடைக்குமிடம்:- பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். வெளியீடு: பிறைற் சென்ரர். 8945

தனிப்பட்ட முறையாகவோ அல்லது வீடுகள் சென்று ஆங்கில இலக்கண, இலக்கியம் (Emma Mc Beth) பேச்சு Spoken English கற்றுக்கொடுக்கப்படும் விளம்பர இல 8920 மே/பா, ஈழநாடு, யாழ்ப்பாணம். 8920

### தவறிவிட்டதா?

3-4-78 இரவு கொடிகாமம்-யாழ். பஸ்ஸிலிருந்து சாக்குடன் சில பொருட்களை தவறுதலாக எம்மிடம் சேர்த்தனர். உரியவர் தொடர்பு கொள்க: கொ. திருமால் நாயுடு, 'சரஸ்வதி வாசம்', 11, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் 8951

### CLASSES


I. C. M. A. May 1978 Chartered Preliminary Nov 1978 Rapid Course Jaffna Education Centre. No 22, Ramiah Chettiar Lane, Hospital Road, Jaffna. 8946

### தட்டுப்பாடு

[காரைநகர்]

காரைநகர் வ... கிராம சபையிலுள்ள ஊழ ...நீர் விநியோகத்திட்ட இயந்திரம் அடிக்கடி கோளாறு அடைவதாலும், மின்சாரம் ... படுவதாலும் அப்பகுதியில் இடைவிடாமல் தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்படுகிறது. [உ]

# அளவெட்டி அருணோதயா பரிசளிப்புவிழா இன்று



(பண்டத்தரிப்பு)

அளவெட்டி அருணோதயாக் கல்லூரி வருடாந்த பரிசளிப்பு விழா இன்று புதன்கிழமை கல்லூரி மண்டபத்தில் நடைபெறுகிறது.

எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் பிரதம அதிதியாகக் கலந்துகொள்ளும் இவ்விழாவில் வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. வி. மாணிக்கவாசகர், பிரதி வடமாகாண ஆணையாளர் திரு. கு. தம்பிப்பிள்ளை ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொள்கிறார்கள். திருமதி தம்பிப்பிள்ளை பரிசில்களை வழங்குவார்.

இதேவேளை அளவெட்டி அருணோதயாக் கல்லூரிக்கு மலேஷியாவில் இருந்து பரிசில் நிதி வழங்கப்படுகிறது.

மலேஷியா கோலாலம்பூரைச் சேர்ந்த திரு க சின்னப்புவும் பாரியாரும் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மாணவருக்கு புலமைப் பரிசிலுக்கும், பரிசிலுக்குமென ஒரு புதிய நிதித்திட்டத்தை அளித்துள்ளனர்,

திரு சின்னப்பு இக்கல்லூரியின் பழைய மாணவராவார்.

திட்டம் பின்வருமாறு: இரண்டாம் வகுப்பு முதல் இறுதி வகுப்புவரையுள்ள மாணவர்களில் அவர்களது வருடாந்தப் பரீட்சைப் பெறுபேறுகளில் முதலிடத்தைப் பெறுபவர்களுக்கு புலமைப்பரிசில்களும் பதக்கங்களும் வழங்குவதற்கென 1750 ரூபா இவர்களால் வழங்கப்படும்.

கல்லூரித்தாபகர் அருணாசல உடையார், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், யோகர் சுவாமிகள் ஆகிய மூன்று பெரியார்களின் ஞாபகார்த்தமாக ஒவ்வொன்றும் 50 ரூபா வீதம் மூன்று நினைவுப் பரிசில்களுக்கு ரூபா 150

இக்கல்லூரியிலிருந்து இலங்கைப் பல்கலைக்கழகத்திற்கும் பிரவேசிக்கும் ஒருவருக்கு நிரந்தரமாக வருடந்தோறும் வழங்கப்படவிருக்கும் விஞ்ஞான புலமைப்பரிசில் இட்டத்தின் இரண்டாவது அம்சமாகும். (உ)

## விஸ்தரிக்கக் கோரிக்கை

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு இ.போ.ச. டிப்போவினால் நடாத்தப்படும் காவெட்டி - ஆயித்தியமலை பஸ் சேவையை மேலும் விஸ்தரிக்குமாறு மடுவான்கரைப் பிரயாணிகள் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

சேவையில் ஈடுபடுத்தப்படும் பஸ் காலையில் ஒரு தடவையும் பின்னேரங்களில் ஒரு தடவையும் தற்போது ஈடுபடுத்தப்படுகின்றது. இச்சேவை பிரயாணிகளைத் திருப்திசெய்வதாக இல்லையாம் ஆகவே தற்போதுள்ள பஸ்சேவை நேர அட்டவணையை மாற்றி கரவெட்டி - மகிளவட்டவான் சேவையை அதிகரிக்கும்பட்சத்தில் கரவெட்டியிலிருந்து கன்னன்குடா துறைக்குச் சென்று அங்கிருந்து மண்டபத்தடி ஆஸ்பத்திரி ஊடாக இலுப்படிச்சேனை வரைக்கும் புதிதாக பஸ்சேவையையும் ஆரம்பிக்கும்படி கேட்கப்பட்டுள்ளது. [உ]

## அறிவித்தல்

ஆடியபாதம் வீதி ஆட்டிறைச்சிக் கடை குத்தகை

கிராமசபை, கொக்குவில்.

கொக்குவில் ஆடியபாதம் வீதிச் சந்தை ஆட்டிறைச்சிக் கடைக்கான சீல் வைத்த கேள்விகள் 12-04-1978 காலை 10 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். மேலதிக விபரங்களுக்கு கிராமசபை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

ந. அமுதசாகரன்,
விசேட ஆணையாளர்,
கொக்குவில்,
கிராமசபை.

கிராமசபை அலுவலகம்,
கொக்குவில்,
03-04-1978. 8951

## "இந்திய சஞ்சிகைகள் இங்கு மலைபோல் குவிகின்றன"

(வெள்ளவத்தை)

இந்தியத் திரைப்படங்களையும் இந்திய சஞ்சிகைகளையும் பார்க்கும் காலம் மாறி இலங்கைப் படங்களையும் சஞ்சிகைகளையும் பார்க்கும் நிலை ஏற்பட்டிருந்தது. ஆனால் அதனை அழிக்கும் நிலைமை இப்போது உருவாகியுள்ளது"

இவ்வாறு திரைப்பட நடிகர் எஸ் எம் முஸ்தாபா "இலங்கை இந்திய கூட்டுத் தயாரிப்பு" என்ற கருத்தரங்கில் பேசும்பொழுது குறிப்பிட்டார்.

பாரதி கலாமன்றம் ஏற்பாடு செய்திருந்த இக் கூட்டத்திற்கு கொழும்பு விவேகானந்தா வித்தியாலய முன்றலில் அதிபர் திரு. வ நடராசா தலைமைவகித்தார்.

ஜனாப் எஸ் எம் முஸ்தாபா மேலும் பேசுகையில், "கடந்த காலங்களில் அரசு இந்திய சஞ்சிகைகளுக்குக் கட்டுப்பாடு விதித்திருந்தது. ஆனால் தற்போது கட்டுப்பாடு நீங்கி மலைபோல் சஞ்சிகைகள் வந்து குவிகின்றன. இந்திய திரைப்படங்களைக் கடந்த முப்பது வருடங்களாக பார்த்துவருகிறோம். அது போதாது என்று கட்டுத்தயாரிப்பு என உள்ளூர்த்தயாரிப்புக்களை வேறு நசுக்கப்பார்க்கிறார்கள்" என்றார்.

நடிகர் கே ஏ ஜவாஹர் பேசுகையில், "இலங்கை திரைப்படக்கூட்டுத்தாபனம் உருவாகிய பின்னர் தமிழ்த் திரைப்படத்துறையில் புதிய சாப்தம் உருவாகியது. அதனை இல்லாதொழிக்கும் முயற்சியே கூட்டுத்தயாரிப்பு" என்றார்.

மற்றும் திருவாளர்கள் த மணி, இக்பால், கலைச்செல்வன், லடீஸ் வீரமணி ஆகியோரும் பேசினர். (அ)

## திருக்கேதீச்சரத்தில் விடுமுறை கழிப்பர்

[யாழ்ப்பாணம்]

கைதடி சைவ அநாதை இல்லத்தைச் சேர்ந்த இருபது சிறுவர்கள் பாடசாலை விடுமுறையைக் கழி பதற்காக திருக்கேதீச்சரம் செல்லவிருக்கின்றனர் எதிர்வரும் 15ம் திகதி செல்லவிருக்கும் இவர்கள் திரு ஆ கந்தையா தலைமையில் இரண்டு வாரங்கள் அங்கு தங்கிச் சிரமதானம் ... வள் வழிபாடு என்பவற்றில் காலத்தைச் செலவிடுவர், சென்ற ஆண்டு இவர்கள் மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷனில் தங்கியிருந்து பயிற்சி ... பெற்றமை குறிப்பிடத்தக்கது.

### யாழ்ப்பாணத்திலிருந்து

# டாக்ஸியில் கைக்குண்டுகள் வந்திருப்பதாக அதிகாரி கூறினார்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்திலிருந்து டாக்ஸிகளில் எனக்கு கைக்குண்டுகள் வந்திருப்பதாகத் தமக்குத் தகவல் கிடைத்துள்ளதாக எனது வீட்டுக்கு வந்த உயர் அதிகாரி ஒருவர் என்னிடம் தெரிவித்தார். எனது வீட்டுக்கு அருகே டாக்ஸிகள் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் சோதனையிட்டுப் பார்க்கும்படியும் கூறினேன். அவர் சென்றுவிட்டார்.

இவ்வாறு முல்லைத்தீவு எம் பி திரு எக்ஸ் எம் செல்லத்தம்பு தொடர்ந்த சாட்சிய மளிக்கையில் கூறினார்.

அவர் மேலும்கூறியதாவது: முல்லைத்தீவு பொலிஸ்நிலையத்தைச் சேர்ந்த சப்-இன்ஸ்பெக்டர் பாலசிங்கமும் சார்ஜண்ட் தம்பிராசாவும் திறமையாகக் கடமையாற்றினார்கள் இதற்காக அவர்கள் இருவரும் இடமாற்றம் செய்யப்பட்டார்கள், நான் இந்த இடமாற்றம் தொடர்பாக மேலதிகாரிகளுக்கு புகார்செய்ததைத் தொடர்ந்து சார்ஜண்ட் தம்பிராஜா மீண்டும் முல்லைத்தீவுக்கு மாற்றப்பட்டுள்ளார்.

### 5,00,000 எழுத்துக்கள் கொண்ட தந்தி

நான் கொழும்பிலிருந்தபோது 5,00,000 எழுத்துக்களைக்கொண்ட தந்தியின் பிரதி ஒன்று எனக்குக் கிடைத்தது. இத்தந்தியை பதுக்குடியிருப்பு கிராம முன்னேற்றச் சங்கத் தலைவர் கே தம்பாபிள்ளை அனுப்பியிருந்தார். இந்தத் தந்தியை அவர் பிரதம மந்திரிக்கு அனுப்பியிருந்தார். முல்லைத்தீவு பொலிஸ் இன்ஸ்பெக்டர் டேவிட் மக்களை பயமுறுத்துவதாகவும் ஏசுவதாகவும் அந்தத் தந்தியில் புகார் செய்திருந்தார். நான் எனக்குக் கிடைத்த தந்தியின் பிரதியை பிரதமரிடம் சமர்ப்பித்து இன்ஸ்பெக்டர்மீது நடவடிக்கை எடுக்குமாறு கூறினேன்.

### பிரதமர் உடன் நடவடிக்கை

பிரதமர் உடனடியாக வயலஸ் மூலம் இன்ஸ்பெக்டர் டேவிட்டை இடமாற்றஞ் செய்யுமாறு உத்தரவிட்டார். இதற்கு முன் மெல்பத்து வடக்கு மரணவிசாரணை அதிகாரி பீ. தியாகராசா வை இன்ஸ்பெக்டர் தாக்கியிருந்தார். தியாகராசா வவுனியா பொலிஸ் அதிபருக்கும் புகார் செய்திருந்தார். வவுனியாப் பொலிஸ் அதிபரினால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை இதன் காரணமாக தியாகராசா, இன்ஸ்பெக்டர் டேவிட்டுக்கு எதிராக டிசம்பர் மாதம் நீதிமன்றத்தில் வழக்கொன்றைத் தாக்கல் செய்தார்.

டாக்டர் ஒருவர் திருகோணமலையிலிருந்து யாழ்ப்பாணம் சென்றிருந்தார். அவர் சுகமாகப் போய்ச் சேர்ந்தாரா என்பது பற்றி ஒரு தகவலும் கிடைக்கவில்லை. டாக்டர் ஒருவர் அநுராதபுரத்தில் கொலை செய்யப்பட்டார் என்ற தகவல் கிடைத்ததால் அதுபற்றிவிசாரிக்க டாக்ஸியில் இவர்வந்து என்னிடம் விசாரித்தனர்.

அச்சமயத்தில் யாழ்ப்பாணம் செல்லமுடியுமா என்று விசாரித்தனர். பின்னர் முதலில் டாக்டரை யாழ்ப்பாணம் கொண்டுபோன டாக்ஸியும் வந்து சேர்ந்தது. டாக்டர் சுகமாகப் போய்ச் சேர்ந்தாரென்று அவரை யாழ்ப்பாணத்தில் சேர்த்த டாக்ஸிச் சாரதி தெரிவித்தார்.

இரண்டு டாக்ஸிகளும் திரும்பித் திருக்கோணமலைக்குச் செல்லும் வழியில், முல்லைத்தீவுக்கு வந்தனர். என் வீட்டுக்கு இரண்டு டாக்ஸிகளும் வந்தன. அன்று என் வீட்டில் தங்கிச் செல்ல விரும்பினர்கள். பக்கத்தில் டாக்ஸிகளை நிறுத்திவிட்டுத் தேநீர் குடித்தார்கள். அப்போது ஒரு உயர் அதிகாரி வந்து, இரண்டு டாக்ஸிகள் யாழ்ப்பாணத்திலிருந்து வந்ததா எனக் கேட்டார். 'ஆம்' என்றேன். முதல் நாள் யாழ்ப்பாணம் சென்ற டாக்ஸி வந்ததென்று கூறினேன்.

ஏன் கேட்கிறீர்கள் என்று அந்த அதிகாரியிடம் கேட்

(8ம் பக்கம் பார்க்க)


## யாழ். றோட்டரி நடத்தும் பஸ் நடத்துநர் தெரிவு கூப்பன்

நடத்துநரின் பெயர்..............................

பதிவு இலக்கம்..............................

அனுப்புபவரின் பெயர்..............................

அனுப்புபவரின் விலாசம்..............................

திகதி .............. ..............................
ஒப்பம்

இக்கூப்பனைக் கத்தரித்து பூர்த்தி செய்து டாக்டர் பா சோ பாரதி, 24, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பவேண்டும். கூப்பன் இன்றி அனுப்பப்படும் தெரிவுகள் நிராகரிக்கப்படும். (இ)

ஈழநாடு
The Eelanaadu

## பத்திரிகைத் தர்மம்

இலங்கைப் பத்திரிகைச் சபை [பிறஸ் கவுன்ஸில்] புதிய தலைவர் திரு. ஜே. டபிள்யு. சுபசிங்கா, தினசரிப் பத்திரிகை ஆசிரியர்களை அழைத்து, இந்நாட்டில் பத்திரிகைத் தொழில் வளர்ந்தோங்கி, மக்கள் நல்வாழ்வு வாழும் முறையில், பத்திரிகா தர்மத்தை வகுக்க முதல் முதலாக எடுத்துள்ள முயற்சி பாராட்டத்தக்கதாகும்.

முப்பது ஆண்டுகளுக்கு முன்பாக நாடு விடுதலை அடைந்தபோதே இவ்வித முயற்சி எடுக்கப்பட்டிருக்க வேண்டும். அப்படிச் செய்திருந்தால் நாட்டில் பல தவறுகள் நடவாமலும், இன்றுள்ள அவதிநிலை ஏற்பட்டிராமலும் தவிர்த்திருக்கலாம். சிங்களம் மட்டும் சட்டத்தைக் கொண்டுவந்ததால், நாட்டின் ஒற்றுமையும் அமைதியும் குலைந்தது. அந்த இமாலயத் தவறிலிருந்து நாடு இன்னும் மீள முடியவில்லை. அரசியல் தலைவர்கள் செய்யக்கூடிய தவறுகளை, சுதந்திரத்துடன் நடுநிலையிலிருந்து பத்திரிகைகள் அவ்வப்போது கண்டித்திருப்பின், அரசும், அரசியல் தலைவர்களும் அதிக தவறு செய்திருக்கமாட்டார்கள்.

பத்திரிகைகளுக்கும், பத்திரிகை ஆசிரியர்களுக்கும் இன்று உண்மையில் சுதந்திரம் உண்டா? பத்திரிகைகளின் பொறுப்பும், ஆசிரியர்களின் கடமையும், உரிமையும் என்ன என்று தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளனவா? பல பத்திரிகை ஆசிரியர்களும் கலந்துபேசி, பொது நன்மைக்கான முறையில் பத்திரிகைகள் மூலம் வழிகாட்டினால், நாட்டு மக்களின் எதிர்காலம் எவ்வளவோ மேலாக இருக்கும்.

இலங்கையில் பத்திரிகைத் தொழிலை மேலான வகையில் நடத்தவும், பத்திரிகா தர்மத்தை வகுக்கவும், பத்திரிகைக்காரர்களுக்கு நல்ல பயிற்சியை அளிக்கவும் புதிய திட்டங்கள் வகுக்கப்பட இருக்கின்றனவாம். சிறப்பாகச் சிறிய பத்திரிகைகளின் குறைகளை உணர்ந்து தக்க உதவிகளை அரசாங்கம் அளிக்கவேண்டும்.

பத்திரிகை ஆசிரியர்களும் மற்றவர்களுக்கு வழிகாட்ட வேண்டியவர்களாக இருப்பதால், அவர்கள் இலட்சிய வாழ்வு வாழவேண்டியவர்களாவர். விருப்பு, வெறுப்பின்றி, மக்களின் நன்மையையே குறிக்கோளாகக் கொண்டு, பத்திரிகைகள் துணிச்சலுடன் நடந்து, அரசாங்கத்திற்கும், அரசியல் தலைவர்களுக்கும், மக்களுக்கும் வழிகாட்டமுடியுமாயின், இலங்கையின் இன்னல்கள் விரைவில் தீரவும், நமது எதிர்காலம் சிறப்புறவும் முடிவதாக இருக்கும்.

பத்திரிகைத் தொழிலுக்கு வருமானம் அவசியமே. ஆனால், பண இலாபத்தையே குறிக்கோளாகக் கொள்ளக்கூடாது. மக்கள் பொது வாழ்வுக்குத் தீனான வழிவகைகளைத் தவிர்த்து, பத்திரிகைத் தொழிலைப் புனிதமாக நடத்த, பத்திரிகைத் தர்மம் இங்கு நிலைநாட்டப்படவேண்டும். அதற்கு இப் புதிய முயற்சி உதவுவதுடன், பலரது ஒத்துழைப்பும் கிடைக்குமென நம்புவோம்.

# நாயைப்போல உணவை நக்கிச்சாப்பிட நிர்ப்பந்தித்தார்

## சன்சோனிக் கமிஷன் விசாரணைநடக்கையிலேயே மன்னார்ப்பொலிஸில் சித்திரவதை!

### திரு. செல்லத்தம்பு தொடர்ந்து சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

"யாழ்ப்பாணத்தில் இக்கமிஷன் விசாரணை நடக்கும் சமயத்திலேயே மன்னார்ப் பொலிஸில் தருமலிங்கம் என்பவர் சித்திரவதை செய்யப்பட்டார். அவரது உணவை நாயைப்போல நாக்கினால் நக்கிச் சாப்பிடும்படி இன்ஸ்பெக்டர் நிர்ப்பந்தித்தார்." என்று முல்லைத்தீவு எம். பி. திரு. எக்ஸ். எம். செல்லத்தம்பு சன்சோனிக் கமிஷன்முன் தொடர்ந்து சாட்சியமளிக்கையில் தெரிவித்தார்.

முல்லைத்தீவு எம். பி. திரு. எக்ஸ். எம். செல்லத்தம்பு மேலும் கூறியதாவது:

5-9-77 காலை 6 30மணிக்கு வட்டுவாகலைச் சேர்ந்த சுந்தரலிங்கத்தின் சகோதரரான ராமுப்பிள்ளை தர்மலிங்கம் வந்து 4-9 77ல் தான சகோதரன் வீட்டில் படுத்திருந்ததாகவும் தன் சகோதரன் வவனிக்குளம் செல்லவிருப்பதால் தான் திரும்புவது நிச்சயமில்லாதிருந்ததால் தன்னை வந்து படுக்கச் சொன்னதாகவும் கூறினார். அப்போது நள்ளிரவு ஒரு மணிக்கு ஜீப்பில் இன்ஸ்பெக்டர் டேவிட்டுடன் வந்த போலீஸார் வீட்டைச் சோதனையிட்டு தன்னைக் கைதுசெய்து சென்றதாகக் கூறினார் தான் பொலிஸ் நிலையத்திற்குச் சென்று இன்ஸ்பெக்டர் டேவிட்டுடன் கதைத்தேன். அவர் பிணையில் விட முடியாதென்றார். கோர்ட்டில் பிணைக்கு ஆட்சேபிக்கவில்லையென்றார். பின் அவர் கோர்ட்டில் ஆஜர் செய்யப்பட்டபோது என் மன் சட்டத்தரணி மகேந்திரன் பிணை கோரியபோது பொலிசார் ஆட்சேபித்ததினால் ரிமாண்டில் வைக்கப்பட்டார்.

## கைது செய்து பிணையில் விட்டது ஏன்?

அன்றுகாலை 10மணிக்கு சோமம்பிள்ளை ஜோசப் பொலிஸ் நிலையத்திருக்குச் சென்றார் அவர் பொலிஸ் விடுதிகளுக்கு மீன் வழங்குபவர். அங்கு அடிக்கடி பணம் வாங்கச் செல்பவர் அவர் சென்றதும், இன்ஸ்பெக்டர் டேவிட்டின் உத்தரவின் பேரில் அவர் கைதுசெய்யப்பட்டார். அவரும் கோர்ட்டில் ஆஜர் செய்யப்பட்டார். சட்டத்தரணி மகேந்திரன் பிணை கேட்டார். பொலிசார் ஆட்சேபித்ததால் ரிமாண்டில் வைக்கப்பட்டார். மறுநாள் அவர் சொந்தப்பிணையில் விடப்பட்டார். இன்றுவரை பொலிசார் அவர்மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஏன் அவர் கைது செய்யப்பட்டு பின் விடுதலை செய்யப்பட்டார் என்பது மர்மமாக இருக்கிறது. சுந்தரலிங்கம் மீதும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

மறுநாள் 6. 9- 77ல் புதுக்குடியிருப்புக் கிராமமுன்னேற்றச்சங்கத்தலைவர் தம்பாபிள்ளை பொலிஸ் நிலையத்தைக் கடந்து செல்லும்போது கான்ஸ்டபிள் ஒருவரால் அழைக்கப்பட்டார். அவர் பொலிஸ் நிலையம் சென்றதும் கைதுசெய்யப்பட்டார் அவர் கோர்ட்டில் ஆஜர் செய்யப்பட்டபோது பொலிசார் அவரை ரிமாண்டில் வைக்குமாறு கோரியதால் 13-9-77 வரை ரிமாண்டில் வைக்கப்பட்டார். தம்பாபிள்ளையாழ்ப்பாணம் சிறைச் சாலைக்கு அனுப்பப்பட்டார். என்மக்களான சட்டத்தரணிகள் மகேந்திரனும், ராதுவும், அவருக்காக ஆஜராகி வாதாடியதைத் தொடர்ந்து அவர் 1500 ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார் 6 மாதமாகியும் பொலிசார் அவர் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. விசாரணை எதுவும் நடக்கவில்லை.

அதே நேரத்தில் இன்ஸ்பெக்டர் டேவிட் உடையார்கட்டு கிராமசேவகர் அதிகாரி திரு விநாயகமூர்த்தி முத்தையன் கட்டு பயிர்ச் செய்கை ஒழுத்தலைவர் ஜெகநாதன் அலைபிலைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை அல்லது ஜோசேப் ஆகியோர் உட்பட பலர்மீது கண்காணிப்புச் செலுத்தி வந்தார் இதனால் அவர்கள் தொகுதியை விட்டு வெளியேறினார்கள்.

நான் 23-9- 77 தேதி பாராளுமன்றத்தில் கலந்துகொண்டு முல்லைத்தீவுப் பொலிஸாரின் நடத்தைபற்றிக்கூறி இதற்கு முற்றுப்புள்ளிவைக்குமாறு பிரதமரிடம் கேட்டேன், பிரதமர் எடுத்த நடவடிக்கையால் பொலிஸாராலும் இராணுவத்தினராலும் தேடப்பட்டு வந்தவர்கள் மீண்டும் தங்கள் கிராமத்திற்கு வந்து வழக்கம் போல் இருந்தார்கள், இதுவரை பொலிஸார் விநாயகமூர்த்தி, ஜெகநாதன், அந்தோனிப்பிள்ளை ஆகியோர் மீது எவ்வித வழக்கும் தாக்கல் செய்யவில்லை.

## றேடியோ தகவல் மூலம் இடமாற்றம்

அதேநேரத்தில் இன்ஸ்பெக்டர் ஓகொட நடவடிக்கைபற்றி நான் பிரதமருக்கு புகார்செய்தேன். இவர் முல்லைத்தீவுக்கு வந்ததும் மக்களைத் தாக்க ஆரம்பித்தார் பருத்தித்துறை நீதிமன்றத்தில் நடந்த வழக்கொன்றில் இன்ஸ்பெக்டர் ஓகொட குற்றவாளியாகக் காணப்பட்டு அங்கிருந்து இடமாற்றம் செய்யப்பட்டவர், பிரதமர் இன்ஸ்பெக்டர் ஓகொடையை உடனடியாக றேடியோத் தகவல் மூலம் முல்லைத்தீவிலிருந்து இடமாற்றம் செய்தார்,

## இராணுவத்தினர் கோழி பிடித்தனர்

செப்டம்பர் 6ம் தேதி வெள்ளா முள்ளிவாய்க்காலைச் சேர்ந்த திருமதி நடராசா அன்னலட்சுமியின் வீடு தீக்கிரையாகின, அவர் வந்தென்னிடம் புகார்செய்தார், இராணுவத்தினர் முதலில் வந்து தன்வீட்டில் புகுந்து கோழியைப் பிடித்தார்களென்றும் பணம்கேட்டபோது அவர்கள் தாறுமாறுகப் பேசிவிட்டுப் போனார்களென்றும் பின் திரும்பிவந்து வீட்டுக்குத் தீ வைத்தார்கள் என்றும் கூறினார், முல்லைத்தீவுப் பொலிஸ்நிலையத்திற்குப்போய் புகார் செய்யும்படி கூறினேன். அவர் அப்படிச் செய்யப் பயப்பட்டார், அந்நாட்களில் மிகக்குறைவானவர்களுக்கே பொலிஸ் நிலையம் செல்லும் துணிச்சல் உண்டு. நான் அப்பெண்ணை ஏ ஜி ஏ விடம் அனுப்பினேன் அவரின் வீட்டை ராணுவத்தினர் புதுப்பித்து கட்டித்தருவதாகக் கூறியுள்ளதாக ஏ ஜி ஏ என்னிடம் கூறினார், ஆனால ஒன்றும் நடக்கவில்லை.

## தவறணைகளுக்கு தீ

13-9-77ல் வலயமடம் கள்ளுத்தவறணைக்குத் தீவைக்கப்பட்டது, முள்ளியவளை, வட்டுவாகல் கள்ளுத்தவறணைகளுக்குத் தீ வைக்கப்பட்டது, இந்தத் தீவைப்புச் சம்பவங்களுக்கு இராணுவத்தினரும் பொலிஸாரும்தான் பொறுப்பு என குத்தகைக்காரர் கருதினர்

இதனால் இராணுவத்தினருக்கும் பொலிசாருக்கும் எதிராக அவர்கள் புகார்செய்யப் பயப்பட்டனர். 4 9 77ல் கைதுசெய்யப்பட்ட சுந்தரலிங்கம், வட்டுவாகல் கள்ளுத் தவறணைக் குத்தகைக்காரர். அவர் வலயமடம் தவறணையிலும் அக்கறையுடையவர் இதுபற்றி அவர் இங்கு சாட்சியமளிப்பார்.

கொக்குளாயிலும், மற்றும் சில இடங்களிலும் நடந்த சம்பவங்களுக்கு பொருளாதார நிலையையும் மீன்பிடிப்போட்டியுமே காரணமென முன்பு கூறியிருந்தேன் அண்மைக்காலத்தில் வெளியிலிருந்து கூடுதலான சிங்கள மீனவர்கள் வரத்தொடங்கினர்கள்.

1951ம் ஆண்டு முதல் 56ம் ஆண்டுவரை நான் முல்லைத்தீவு டி ஆர் ஓவாக இருந்தபோது 1955ல் மீன்பிடி அதிபர் ஏச் சி குணவர்த்தன, கொக்கிளாய் முகத்துவாரத்திலுள்ள மீன்பிடி வாடிகள் 33 வாடிகளாக கட்டுப்படுத்தப்பட வேண்டுமென முடிவுசெய்யப்பட்டது. அப்பொழுது கொக்கிளாயில் மீன்பிடி நடவடிக்கை கள். கொக்கிளாய் கிராம சேவகர் தேனுமலைசெல்லையாவினால் மேற்பார்வை செய்யப்பட்டுவந்தது. அவரது வீடு 23-8-77ல் திரு வால்பொலாவின் முன்னிலையில் எரிக்கப்பட்டது.

## இளைப்பாறிய பின் வாடிகள் அதிகம்

1963ம் ஆண்டுஇளைப்பாறிய பின்னர், 1970 கொக்கிளாயில் வாடிகள் 75 ஆக அதிகரித்தன. 1970 முதல் 1977 வரை இது இரட்டி மடங்காக அதிகரித்து 150ஆக மாறியது. வெளி மீனவர்களுக்கு தற்போது வழங்கப்பட்டுள்ள பெர்மிட், 1955ம் ஆண்டு மீன்பிடி அதிபர் குணவர்த்தன வழங்கியதிலும் ஐந்துமடங்காக அதிகரித்தது.

இதேபோல் திரு குணவர்த்தன நாயாற்றிலும் மீன்பிடி வாடி 22க்கு மேல் இருக்கக் கூடாதென கட்டுப்படுத்தினார். ஆனால் இன்று 150 வாடிக்கு மேல் அங்கு இருக்கிறது. முல்லைத்தீவு நகரத்திலிருந்து தென்பக்கமாக 11 மைல்களுக்கு அப்பாலுள்ள நாயாற்றுக்கு முல்லைத்தீவிலிருந்து நீண்டகாலமாக மீனவர்கள் சென்றுவந்தனர் இப்போ வெளி மீனவர்கள் மேலதிகமாக தொழில்பார்ப்பதால், முல்லைத்தீவு மீனவர் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கொக்கிளாயிலும், நாயாற்றிலும் நடைபெற்றுவரும் மீன்பிடி பற்றி ஒரு கமிஷன் நியமிக்குமாறு மீன்பிடி அமைச்சரைக் கோரியுள்ளேன் வெளிமீனவர்களின் ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்காகவே இக் கமிஷனைக் கோரியுள்ளேன்.

கடந்த 20 வருட காலமாக தண்ணீரூற்றிலுள்ள சுமார் 400 முஸ்லிம்களும், முள்ளியவளை, வற்றாப்பளை, புதுக்குடியிருப்பு, ஆலந்தபுரம், இரணைப்பாலை, வயலைன்மடம், முல்லைத்தீவு மற்றும் இடங்களிலுள்ள பெரும்பாலான சிறுபான்மைத் தமிழரும், பரவைக்கடல் மீன்பிடியில் இதங்கியுள்ளார்கள் இவ்வருட இறாலின் விலை ஏற்றுதல் 30 ரூபாவாக அதிகரித்ததைத் தொடர்ந்து வலையில் மீன் பிடிக்கத் தெரியாதவர்களே இத்தொழிலில் இறங்கியுள்ளார்கள்.

1977 நவம்பரில் மன்னாரைப் பொலிசாரும் இராணுவத்தினரும் கொக்குதொடுவாய்க்கு மல்லாவிக்குச் சென்று டனிக் சில்வா என்பவர் பற்றிய தகவலை அறிய மக்களை அடித்து விடுகளைச் சோதனையிட்டுவந்தனர் வவனிக்குளத்திலுள்ள ஒட்டன் குளத்தைச் சேர்ந்தவர் டனிக் சில்வா. இவர் ஆகஸ்ட் கலவர நாட்கள் முதல் காணாமற்போய்விட்டார் இராணுவத்தினர் நடத்திவந்த தாக்குதல்களைக் கப்பகுதியில் பதட்டநிலை ஏற்பட்டுக் குடியேற்ற மக்கள் மீண்டும் வெளியேறவேண்டிய நிர்ப்பந்தம் உருவாகிறது.

## பிரதமர் எடுத்த நடவடிக்கை

நான் இது பற்றிப் பிரதமரைச் சந்தித்து அப்பாவி மக்கள் தாக்கப்படுவதாகக் கூறி யார் மீதும் சந்தேகமிருந்தால் அவர்களை நானே ஆஜர்செய்யத் தயாராக இருப்பதாகக் கூறினேன் என் வேண்டுகோளின்படி பிரதமர் நடவடிக்கை எடுத்ததால் மக்கள் துன்புறுத்தப்படுவது நிறுத்தப்பட்டது.

1978ல் பிரதமர் ஜனாதிபதியாகப் பதவியேற்றதும் மீண்டும் மக்களைத் தாக்கத் தொடங்கினார்கள் வவனிக்குளம் பொலிஸ் பொறுப்பில் இல்லாத காரணத்தால் இரத்தம் மன்னார் பொலிசார் அங்கு தங்கிவிட்டனர்

சில அப்பாவி மக்களைக் கைது செய்து, மன்னார் பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டுசென்றனர். அங்கு அதிர்ஷ்டவசமாக அவர்கள் மூன்று பேர் விநாயகத்தின் மகன் திரு சந்திரகாசனால்

(7ம் பக்கம் பார்க்க)

## மணிவாக்கு

வாலிபம் அதிசயிக்கத் தக்க சக்தி வாய்ந்தது. ஆனந்தமயமான மனக்கோட்டை கட்டிக் களிப்பதிலும் பகற்கனவு காண்பதிலும் வாலிபத்துக்கு அலாதிப் பிரியம்.

—பென் ஜான்சன்.

# 'எனதுவீடும், வாடியும் எரிக்கப்பட்டது; பின்னர் சிங்களவரின் வாடிக்கு தீ வைத்ததாக வழக்கு'

## கொக்கிளாய் மீன்முதலாளி நேற்று அளித்த சாட்சியம்

(கா. யோகநாதன்)

கொக்கிளாய் மீன் முதலாளி செபஸ்தியாம்பிள்ளை அந்தோனிப்பிள்ளை சன்சோனி கமிஷன்முன் நேற்று சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

'என்னை குணம் என்றும் அழைப்பார்கள். கொக்கிளாய் முகத்துவாரத்தில் ஐஸ்வாடி ஒன்று ஆரம்பித்தேன் தமிழருக்கு சொந்தமான ஐஸ்வாடி 10வருடத்துக்குமுன் இருந்தது. பின் இல்லை. எனது ஐஸ்வாடி மட்டும் இருந்தது சிறிதாக முதலில் தொடங்கினேன்.

### சிங்கள மீனவர்

'தமிழ், சிங்கள மீனவர்கள் எனக்கு மீன்தந்தார்கள். அதற்குமுன், சிங்கள மீனவர்கள் சிங்கள முதலாளிக்கு கொடுத்தனர். 76-ம் ஆண்டு சிங்கள மீனவர், கொஞ்சம் கொஞ்சம் தருவார்கள். நான் அவர்களுக்கு முற்பணமாக பணம்கூடக் கொடுத்ததால் எனக்கு தந்தார்கள். பிடிக்கிற மீன் எல்லாம் தந்தார்கள். கஷ்டப்பட்ட நேரத்தில் பண உதவி செய்வேன். சிங்கள முதலாளிகள் இதனுல் என்மீது ஆத்திரப்பட்டனர். நான் முன்னேறுவதைப் பார்த்து பொறுமைப்பட்டனர். ஆகஸ்ட் மாதத்தில் 125 தமிழ் மீனவர்களும், 30 சிங்கள மீனவர்களும் இருந்தார்கள். நான் முற்பணமாக, சிங்களவருக்கு 40,000 ரூபா கொடுத்துவைத்திருந்தேன்.

### எனது வாடிக்கு வந்தனர்

'ஆகஸ்ட் 20-ம் திகதி நான் என் வாடியில் இருந்தேன். அப்போது 3 ஜீப்புகள் வந்தன. பொலிஸ் இராணுவம், புல்மோட்டை பகுதி வல்பொலவும், பதவியா இன்ஸ்பெக்டரும் வந்தனர். என் வாடிக்குள் போய் ஐஸ்பெட்டிக்குள் கிண்டி கிளறிப்பார்த்தார்கள், அந்தோரிலும் தேடிப் பார்த்தார்கள்.

'வல்பொலவும், இன்ஸ்பெக்டரும் சிங்களவர்களுக்கு சொந்தமான இடம். இங்கு இருக்கக்கூடாது, உங்கள் ஊருக்கு போக வேண்டும் என்றனர். ஊரடங்குச் சட்டம் போடப்பட்டுள்ளது போய்விடுங்கள் என்ருர்.

ஊரடங்கு நேரத்தில் வெளியில் போக முடியாதே என்றேன். எல்லாரிடமும் 'ரைபிள்' இருந்தது.

'பதவியா இன்ஸ்பெக்டரும் வல்பொலவும், நாங்கள் பொறுப்பு கொக்கிளாய்க்கு போய்விடு என்ருர்கள். நான் பின் கொக்கிளாய்க்குப் போனேன். வாகனம் திரும்பி வந்தது. அன்று கொக்கிளாய் போனேன். அலோசியசிடம் பொலிஸில் புகார் செய்யச் சொன்னேன்

'21-ம் திகதி இரவு 12 மணிக்கு அலம்பலுக்கு போனேன் எனவாடி சிங்கள ஆட்களால் எரிக்கப்பட்டதாக தகவல் கிடைத்தது. அலம்பலில் மச்சான் வீட்டில் தங்கியிருந்தேன். பின் வேறு இடத்திற்குப் போய் விட்டேன்.

# "ஊரடங்குச் சட்டநேரத்தில் இராணுவத்தினர் வாடிக்குவந்து வெளியேறுமாறுகூறினர்கள்; பின்எனவீடுஎரிந்துவிட்டது"

'21-ம் திகதி. பதவியா பொலிஸார்தேடுவதாக அறிந்தேன். அதனுல் குமுழமுனைக்குப் போனேன். பின் என் மனைவி, பிள்ளைகளை ஜோர்ஜ் கூட்டிச்சென்று பாதுகாப்பாக வைத்திருந்தார் நான் பின் போனேன்.

அலம்பலில் என்னை பொலிஸ் தேடியதாக அறிந்தேன். ஆகஸ்ட் 25ம் தேதி இரவு எம். பி யின் வாச்சர் வீட்டுக்கு நெருப்பு வைத்தபின் எங்கள் வீட்டிற்கு நெருப்புவைத்ததாகவும் அறிந்தேன்.

டிசம்பரில் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்திருப்பதாக அறிந்தேன். நான் கோட்டில் போய்சரணடைந்தேன். என் வீடும், வாடியும், முற்றாக எரிந்துவிட்டது. சிங்களதொழிலாளர்க்கு கொடுத்த 40,000 ரூபாவைவிட. வீட்டினுல் 59,000 ரூபா நஷ்டம். பின் யாழ்ப்பாணம் வந்தேன் சிங்கள தொழிலாளர். இப்ப எல்லாரும் சேர்ந்து ஒன்றும்தரவில்லை கொக்கிளாய்க்கு திரும்பபோனேன்.

சட் சரத் சில்வா: கொக்கிளாயில் பலவீடுகளுக்குநெருப்பு வைக்கப்பட்டன? தெரியாது.

சட்: வாடி சிங்களவர்களுக்கு சொந்தமானது?- முகத்துவாரத்தில் உள்ள வாடி சிங்களவருக்கு சொந்தம் அவை எரிக்கப்பட்டது.

சட்: சிங்கள வாடிகளுக்கு தீ வைத்ததாக உமக்கு எதிராக குற்றம் சாட்டப்பட்டது?- ஆம்

சட்: முல்லைத்தீவு பொலிஸார் உம்மை தேடினுர்களா?- ஆம்.

சட்: நீர் யாழ்ப்பாணத்திற்கு வந்தீர்?-ஆம்.

சட்: வாரண்ட் இருந்தது?- ஆம்.

கொக்கிளாயைச் சேர்ந்த வேலுப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை கூறியதாவது:

'ஆகஸ்ட் 21ம் தேதி இரவு பொலிஸாரும், இராணுவத்தினரும், ஜீப்பில் என்வீட்டிற்கு வந்தனர். அவர்களுடன், வல்பொலவும் வந்தார் மற்ருெருவர் வந்தார் அவர் பெயர் தெரியாது. வந்து 'இங்கே இருக்கப்படாது உடனே வெளிக்கிட வேண்டும்' என்று வலியுறுத்தினுர்கள்.

ஊரடங்குச் சட்ட நேரத்தில் எப்படி போகமுடியும் என்றேன் நான்.

"'என்னடா சட்டம் கதைக்கிறுய்'' என்றுகூறி துப்பாக்கியை என் நெஞ்சில் ஒரு இராணுவவீரர் வைத்தார். வெளிக்கிட சொன்னுல் வெளிக்கிடு என்ருர் நான்பயத்தால் காட்டுக்குள் போனேன். அவர்கள் போனபின் திரும்பிவந்தேன். நான் வரும்பொழுது கத்தி பொல்லுடன் சிங்களவர்கள் நின்ருர்கள் மனுவேல்பிள்ளை தயாஎன்பவர் உள்ளே சென்று வீட்டை உடைத்து சாமான்களை வெளியில் போட்டுக் கொண்டிருந்தார். பின் காட்டுக்குள் ஓடினேன். பின் கொக்கிளாய்க்கு போனேன் எமது சொந்தக்காரர் அங்கிருந்தார்கள் திரும்பி என் வீட்டிற்கு வந்தபோது என்வீடு எரிந்திருந்தது. நான் பேசாமல் திரும்பிவிட்டேன். முகத்துவாரத்தில் கல்வீடு இருக்கிறது இரவு 12 மணிக்கு அவ்வீட்டில் டைனமட் சத்தம் கேட்டது. என் வீடுதான் அங்கு கல்வீடு. அதற்கு டைனமட் வைத்துவிட்டதாக நினைத்தேன் நான் இரவு இரவாக வெளிக்கிட்டு கொக்குதொடுவாய்க்கு வந்தேன் பிறகு 4 நாட்களின் பின் போனேன் என்வீடு எரிந்திருந்தது எனக்கு 45,000 ரூபா நஷ்டம் பின் எம் பியிடம் புகார் செய்தேன் அரசுடன் தொடர்புகொண்டு தகுந்த பாதுகாப்பு தருவதாக சொன்னுர்.

# "முல்லைத்தீவுக் கடற்கரையில் இந்தியப் படைகைத் தாக்க இராணுவம் தயாராய்நின்றது"

(யாழ்ப்பாணம்)

''நான் முல்லைத்தீவு அம்பாள் கடைக்குள் நின்றபோது நீதித்துறையைச்சேர்ந்த உயர் அதிகாரி ஒருவர் கடற்கரை நோக்கி ஜீப்பில் போனுர். 2 ஜீப்களில் இராணுவத்தினர் சென்றனர். வழியில் நின்ற மக்களை இராணுவத்தினர் அடித்து விரட்டினுர்கள். நானும் கடற்கரைக்கு ஜீப்பில் சென்றேன்.

''கடலில் ஒரு லோஞ்சு வந்துகொண்டிருந்தது. இராணுவத்தினர் கையில் ரைபிளுடன் பதுங்கிப் பதுங்கி, தாக்குதல் நடத்தத் தயாராளுர்கள். அந்த உயர் அதிகாரி துரதிருஷ்டிக்கண்ணுடி மூலம் கடலைப் பார்த்தபடி இராணுவத்தினரைத் தயாராகும்படி கையைக் காட்டிக் கொண்டிருந்தார். எங்கும் பரபரப்பாக இருந்தது.

### தமிழருக்கு உதவ இந்திய கடற்படை வருகிறது என்ருர்

அங்கு நின்ற ஒரு சாரதி எனது நண்பர். அவர் ஒரு சிங்களவர். என்ன சங்கதி என்று கேட்டேன், 'மச்சான் இந்தியாவிலிருந்து உங்களுக்கு ஆட்கள்' உதவிக்கு வருகிருர்கள் தமிழருக்கு உதவ இந்திய கடற்படை வருகிறது. நாங்கள் வெடிவைக்கப்போகிருேம். நீ இதில் நில்லாதே ஓடு என்ருர்.

''திரும்பிப் பார்த்தேன். இந்தியக் கடற்படை லோஞ்சு முல்லைத்தீவை நோக்கி வந்து கொண்டிருந்தது. கடற்கரையில் இலங்கை இராணுவத்தினர் துப்பாக்கியுடன் தயாராக நின்ருர்கள். சுடஆரம்பித்தால் என்பாடு ஆபத்து எனப் பயந்து சைக்கிளையும் போட்டுவிட்டு ஓடிவிட்டேன்.

மறுநாள் என சைக்கிளை எடுக்கப்போனபோது கடற்படை பற்றி விசாரித்தேன். வல்வெட்டித்துறையிலிருந்து, மணமக்கள், கால்மாறி திருகோணமலைக்குக் கடல்மார்க்கமாகச் சென்றுகொண்டிருந்ததாகவும் சாப்பிடுவதற்காக முல்லைத்தீவு வந்ததாகவும் சொன்னுர்கள்''

முல்லைத்தீவைச் சேர்ந்த மலேரியா தடுப்பு இயக்க ஊழியரான கனகரத்தினம் ஈஸ்வரத்தம்பி சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினுர்.

ஈஸ்வரத்தம்பி மேலும்கூறியதாவது;

''ஆகஸ்ட் 26ம் தேதி 6 மணிக்குச் சிலர் வந்து முறைப்பட்டனர். கள்ளப்பாடு, மணற்குடியிருப்பில் வாடிகளை எரித்துவிட்டார்கள் என்றனர். ஏ ஜி. ஏக்குப் புகார் செய்யவேண்டும் என்றனர். தமிழ் மீனவர் வந்தனர் ஏ. ஜி ஏ கந்தோருக்குப் போனுேம். கச்சேரியில் ஏ. ஜி. ஏ இல்லை. காவலாளி ஏ ஜி ஏ குமுளமுனைக்குப் போய்விட்டதாகச் சொன்னுர். பலர் வந்துகொண்டிருந்தனர். முல்லைத்தீவு எம். பி அங்கு வந்தார். அவருக்குப் புகார் செய்தேன். ஏ. ஜி. ஏ. வந்தபின் கூறலாம் என்ருர். அவரும் நின்ருர்.- பொலிஸ்காரர் வந்து நிற்கவேண்டாம் என எங்களைக் கலைத்தார்கள். ஒருவரும் அசையவில்லை, போக மாட்டோம் என்றேன். ஏ. ஜி. ஏயைச் சந்தித்தபின்தான் போவோம் என்றேன், அமைதியாக இருக்கிருேம் என்றேன். உயர் அதிகாரி ஒருவரின் கட்டளை இது என்றனர். அப்போது காலை 6 மணியிருக்கும். அவர் பின்பு போய்விட்டார்; ஏ. ஜி. ஏ. வந்தார், முறைப்பாட்டை ஆட்கள் கொடுத்தார்கள்நான் சென்றுவிட்டேன்

(5-ம் பக்கம் பார்க்க)

# "இந்த இடம் சிங்களவருடையது; உடன் வெளியேற வேண்டும்"

## இராணுவத்தினரும் பொலிஸாரும் இப்படிக் கூறினுர்களாம்

கொக்கிளாயைச் சேர்ந்த மொகமட் அன்ரன் அலோசியஸ் நேற்று சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

''77 ஆகஸ்ட் மாதம், குணத்தின் ஐஸ்வாடியில் வேலை செய்தேன், ஆகஸ்ட் 18ம் தேதி அனுராதபுரம், யாழ்ப்பாணம் பகுதிகளில் குழப்பம் என்று தெரியும்; நான் கொக்கிளாயில் இருந்தேன். கொக்கிளாய்க்கு கலவரம் பரவியதும் கொக்கிளாய் முகத்துவாரத்திலுள்ள சிங்கள மீனவர், புல்மோட்டைக்குச் சென்றனர். அவர்கள் தங்கள் உடமைகளை, லொறிகளிலும் டிராக்டர்களிலும் ஏற்றிச் சென்றனர்.

### குணம் எங்கே என்று கேட்டனர்

''அன்று இரவு 9 மணிக்கு புல்மோட்டை இல்மனைட் தொழிற்சாலை ஜீப்பும், மற்றும் 2 ஜீப்பும் வந்தது. குணம் வாடியில் நின்ருர் குணம் எங்கே? என்று கேட்டனர். குணம் இருந்தார் பொலிஸாரும் இராணுவமும், வல்பொலவும் ஜீப்பில் வந்தனர். வல்பொல வந்து குணம் எங்கே? என்ருர். உள்ளே இருக்கிருர்என்றேன் அவருடன் போய்; 'இந்த இடம் சிங்களவருக்குரியது, தமிழருக்குரியதல்ல இந்த இடத்தை விட்டுச்செல்லுமாறு'' சொன்னுர். இராணுவம்,பொலிஸ் ரைபிள் வைத்திருந்தது. பின் கொக்கிளாய்க்குச் செல்லுமாறு கூறிவிட்டுச்சென்றனர் திரும்பி வரும்போது இருக்கக் கூடாது என்று கூறிவிட்டு சென்றனர். நாங்கள் அங்கிருந்து சென்ருேம் பின்னர் கெதியாகப் போங்கள் என்று வல்பொல சிங்களத்தில் கூறினுர் குணம் முதலாளி என்னை பொலிஸிக்கு போய் அறிவிக்கும்படி சொன்னுர் அன்று காலை 10 மணிக்கு பொலிஸிக்கு போனேன்.

கமிஷனர்: எந்த பொலிசுக்கு? —முல்லைத்தீவு பொலிசுக்கு என்னுடன் மீன்பிடி கூட்டுத்தாபன ஊழியர் இருவரும் வந்தனர்.

### எனதுபுகார் பதியப்பட்டது

என் புகார் பதியப்பட்டது. பின் குணத்தின் மச்சான் ஜோர்ஜிக்கு அறிவித்தேன். அவர் அலம்பலில் இருந்தார். நாங்கள் கூடிநிற்கும்போது பொலிஸார் வந்தார்கள். இன்ஸ்பெக்டர் ஜீப்பில் வந்தார். எங்களை முல்லைத்தீவு கொண்டு சென்றனர். அப்போது இரவு 7 மணிக்கு போனுேம்.

கமிஷனர்: பேரென்ன? டேவிற் நவரத்தினம் இரவு ஒருமணிக்கு புகார் பதிவு செய்யப்பட்டது. அப்போது ஊரடங்கு சட்டம் இருந்தது திரும்ப கொக்குளாய் வர முடியவில்லை. பட்டனசபைக் கட்டடத்தில் படுத்தோம். 22-ம்தேதி காலை எம். பி வீட்டுக்கு போய்ச் சொன்னுேம். நான் ஏ. ஜி ஏ யிடம் அறிவிப்பதாக சொன்னேன். இப்ப சொன்னதை பொலிசுக்கு சொன்னேன் அதன் பின் கொக்குளாக்குச் சென்றேன். குணத்தின் வாடியும் எல்லா வாடிகளும் எரிந்திருந்தன.

சட்: சரத்சில்வா: வல்பொல பொலிஸ் இராணுவத்துடன் வந்தார்?— ஆம்

சட்: வாகனத்தின் நம்பர் தெரியா?— இல்லை.

சட்: உத்தியோகத்தரை தெரியும்? வல்பொலவை

(5-ம் பக்கம் பார்க்க)

# தமிழ் தொழிற்சங்க கூட்டணி; முல்லைத்தீவு

# எம். பி. கமிஷன்முன் அளித்த விளக்கம்

## "பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியர்கள்: 9 பிரிவுகளாக வகுக்கலாம்"

[யாழ்ப்பாணம்]

"வடக்கு கிழக்கிற்கு வெளியில் உள்ள 30,000 தமிழ் ஊழியர்கள் எனது சங்கத்தில் உறுப்பினர்களாக இருக்கின்றனர். இவர்களில் இலங்கை தொழிலாளர் கழகத்தைச் சேர்ந்த 15,000 பேரும் உள்ளனர்"

முல்லைத்தீவு எம் பி. திரு. எஸ். எம். செல்லத்தம்பு, சட்டத்தரணி பாரிலட்டின் கேள்விக்குப் பதிலளிக்கையில் மேற்கண்டவாறு கூறினார்.

சட்: சங்க உறுப்பினர்கள் ஆகஸ்ட் கலவரத்தில் எவ்விதம் பாதிக்கப்பட்டார்கள்? பாதிக்கப்பட்டவர்களை 9 பிரிவாக பிரிக்கலாம்.

### ஒன்பது பிரிவுகளாக...

"முதலாவது; தாக்கப்பட்டு பயமுறுத்தி துன்புறுத்தப் பட்டவர்களோடு இவர்கள் வேலைத்தளத்தில் சக ஊழியர்களால் தாக்கப்பட்டவர்களாகும்.

இரண்டாவது தாக்கப்பட்டு காயமடைந்தவர்கள் இவர்கள் வேலைத்தளத்தில் சக ஊழியர்களால் தாக்கப்பட்டவர்களாகும்.

மூன்றாவது; வேலைத்தளத்தில் கொலைசெய்யப்பட்டவர்களாகும்.

நான்காவது; வீடுகளில் பயமுறுத்தப்பட்டு ஏசப்பட்டவர்களாகும்,

ஐந்தாவது; வீடுகளில் தாக்கி காயமடைந்தவர்களாகும்.

ஆறாவது காம்பாற்றச் சென்ற நண்பர்கள் தாக்கப்பட்டதாகும்.

ஏழாவது குடும்பத்துடன் வீடுகளிலிருந்து வெளியேற்றப்பட்டு அகதிகள் முகாமிற்கு சென்றவர்களாகும்.

எட்டாவது; உடமைகள் கொள்ளையடிக்கப் பட்டவர்களாகும்.

ஒன்பதாவது; வீடுகள் சேதப் படுத்தப்பட்டவைகளாகும்,

சட்: பலர் வேலைத்தலங்களில் தாக்கப்பட்டு அகதிகளானார்கள்? ஆம்.

சட்: சில ஊழியர்கள் திரும்பி போகவில்லை? ஆம்

சட்: சிலர் வேலையை விட்டு விலகிவிட்டனர்? ஆம் வேலைக்கு திரும்புமாறும் அரசு கட்டளையிட்டிருந்தது.

சட்: கந்தோர்களில் தாக்குதலில் சம்பந்தப்பட்டவர்கள் மீது எவ்வித விசாரணையும் நடத்தாமல் அவர்கள் தொடர்ந்து அதே கந்தோர்களில் வேலைபார்த்து வருகின்றார்களா?—. ஆம் அங்குள்ள ஒரு கந்தோருக்கு தமிழ் ஊழியர்கள் எல்லாரையும் ஒரு அறைக்கு உணவு கொடுக்க அழைத்துச் சென்று உதை கொடுத்தார்கள்.

சட்: இச்சம்பவத்தில் இவ சம்பு தாக்கப்பட்டார்?— ஆம்

சட்: தமிழ் தொழிற்சங்க கூட்டணி உருவானதெப்படி? 1958-ம் ஆண்டு அரசு சிங்கள சட்டதை நிர்வாக ரீதியாக அமுல் செய்ய ஆரம்பித்த போது அரசு ஊழியர்கள் சிங்களத்தில் தேர்ச்சி பெறவேண்டிய நிலைஏற்பட்டது. அப்போதிருந்த தொழிற்சங்கங்கள் நடவடிக்கை எடுக்கவில்லை. இதனால் அரசாங்க லிகிதர் சேவைச் சங்கத்திலிருந்த தமிழ் ஊழியர்கள் வெளியேறி அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தைப் புதிதாக ஆரம்பித்தார்கள். இச்சங்கம் இன்று திறமையாக இயங்கிவருகிறது. 80 சதவீதமான தமிழ் ஊழியர்கள் அங்கம் வகிக்கின்றனர். புகையிரதப் பகுதி, தபால் பகுதி மற்றும் கூட்டுத்தாபனங்களிலும் இச்சங்கம் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. சங்கச் செயலாளர் திரு. ஏ. எஸ். மூர்த்தி மிகத் திறமையாகச் செயலாற்றி, தமிழ் ஊழியர்களை ஒன்றுசேர்த்து வருகிறார். மத்திய வங்கி, தனியார் ஸ்தாபனங்களிலும் கிளைகள் ஆரம்பிக்கப்பட்டுவருகின்றது.

### ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் பாதிப்பு

சட்: எத்தனை பேர் பாதிக்கப்பட்டனர்? - சங்க உறுப்பினர் ஆயிரத்திற்கு மேல் பாதிக்கப்பட்டனர். பலர் பயமுறுத்தப்பட்டனர். வேலைத்தலத்தில் கொலைசெய்யப்பட்டவர்களின் மரணச் "சர்ட்டிபிகட்" எடுக்கமுடியாமல் குடும்பத்தினர் கஷ்டப்படுகின்றனர் கணவனை இழந்த மனைவியும், குழந்தைகளும் அனாதைகளாகத் தவிக்கின்றார்கள். மரண அத்தாட்சிப் பத்திரத்தை எடுக்கமுடியாததினால் மேல் நடவடிக்கை எதுவும் எடுக்க முடியாமல் கஷ்டப்படுகின்றனர். சில ஊழியர்கள் சம்பளம் பெறமுடியாமல் கஷ்டப்படுகின்றனர் சிலர் வேலைக்குச் சென்ற இடத்தில் வேலை நீக்கஞ்செய்யப்பட்டிருந்தனர். பெருமபாலான ஊழியர் வேலைக்குச் செல்லமுடியாத நிலையில் பயத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். சிலருக்கு மனக்கஷ்டம் ஏற்பட்டுள்ளது.

சட்: நீர் 1976ம் ஆண்டு சங்கத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டீர்?-ஆம்.

சட்: எப்படித் தெரிவுசெய்யப்பட்டீர்?-நான் அரசாங்க ஊழியராக இருந்தால் தொழிற்சங்க ஈடுபாடு உள்ளவராக இருந்தேன். சிரேஷ்ட தொழிற்சங்கவாதியாக இருந்தேன்.

### அரசியல் தலையீடு இல்லை

"எமது சங்கத்தில் எந்த அரசியல் கட்சியின் தலையீடும் கிடையாது. தமிழர் விடுதலை கூட்டணிகூட தலையிடாது. கூட்டணி அப்படி தலையிட விரும்பாது.

தொழிற்சங்கங்கள் கூடி ஒரு வேலை நிறுத்தத்திற்கு ஆயத்தம் செய்தனர். கம்யூனிஸ்ட்கட்சி, சமசமசஜக்கட்சி, சுதந்திரக்கட்சி தொழிற்சங்கங்கள் வேலைநிறுத்தம் செய்வதற்கு ஏற்பாடு செய்தனர்.

"நான் எனது சங்க உறுப்பினர்களிடம் அரசுக்கு ஆதரவாகவோ எதிராகவோ, ஒரு வேலைநிறுத்தம் நடைபெறுகையில் தமிழ் ஊழியரின் நலனுக்காக அமைக்கப்பட்ட சங்கம் தான் எமது சங்கம் என்பதை நாங்கள் மறந்துவிடக் கூடாதென்றேன். தமிழரின் நலன் கருதியே நாம் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதைத் தவிரவேறு காரணத்திற்காக ஈடுபடக்கூடாதென்று அவர்களிடம் தெரிவித்தேன்.

### ஆறுமணி நேர நேரடிச்சாட்சியம்

திரு. செல்லத்தம்பு நேற்றுச் சுமார் 2 மணி நேர சாட்சியமளித்தார். ஆகஸ்டில் இரு தினங்கள் சுமார் 6 மணி நேரம் சாட்சியமளித்த திரு செல்லத்தம்பு, குறிப்பை பார்க்காமல் நேரடியாகவே சாட்சியமளித்தார்.

இவரைத் தொடர்ந்து முல்லைத்தீவு தொடர்பான சாட்சியங்கள் பதிவுசெய்யப்பட்டன.

---

"வல்பொலவுடன் வந்தவர்கள்

## வீட்டை கொள்ளையடித்து வீட்டுக்கு தீவைத்தனர்"

கொக்கிளாயைச் சேர்ந்த கடற் தொழிலாளி சூசைப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை சன்சோனிக் கமிஷன்முன் கூறியதாவது:

10 மணிக்கு என் வீட்டிற்கு வந்து முகத்துவாரத்திலிருக்க வேண்டாம் வீட்டைவிட்டு போங்கள் என்று இராணுவமும் பொலிசாரும் சொன்னார்கள். வத்தலபொலவும், இராணுவத்தினரும், ஜீப்பில் வந்தனர் ஜீப்பிற்குப் பின்னால் 100 பேர் வந்தார்கள். ஜீப் வீட்டைத்தாண்டிப் போக பின்னால் வந்த சிங்கள ஆட்கள், கடையை உடைத்துச் சாமான்களை எடுத்தார்கள். டிராக்டரில் கொள்ளைச் சாமான்களை ஏற்றிவிட்டுக் கடைக்குத் தீ வைத்தார்கள். சிங்கள ஆட்கள் நெருப்பு வைத்தார்கள். நான்பற்றைக்குள்ளிருந்து பார்த்தேன். களுமல்லி, யூனிவா என்பவர்களைத் தெரியும். சறுள் ஒன்று இருந்தது அதற்கும் நெருப்பு வைத்தார்கள். முகத்துவாரம் போனார்கள் அங்குள்ள தமிழ் வீடுகள் எரிக்கப்பட்டன

23-ம் தேதி வீட்டில் இருந்த போது ஜீப் ஒன்று வந்தது. பின்னால் சிங்களவர்கள் வந்தார்கள். ஜீப் சந்தியில் நின்றது. அவர்கள் ரோட்டால் போனார்கள். நான் பயத்தால் காட்டிற்குள் ஓடினேன். வீடுகள் பற்றி எரிந்தன. வீட்டுக்கு வந்தேன். வீடெல்லாம் எரிந்துவிட்டது. நான் கிராம சேவகரிடம் புகார் செய்தேன் அவர் பயத்தில் எங்களுக்கு முன் வெளியேறிக் காட்டிற்குள் பாய்ந்து விட்டார்.

பின் நான் கொக்குத்தொடுவாய்க்கு குடும்பத்தைக் கூட்டிச் சென்றேன். ஆடு, கோழி அடுப்படிச் சாமான் எல்லாம் எரிந்துவிட்டன.

கொக்கிளாயைச் சேர்ந்த ஆறுமுகம் பாலையா கூறியதாவது:

"ஆகஸ்ட் 21ம் தேதி 5மணிக்கு வீட்டிலிருந்தேன். அப்போது அந்தோனிப்பிள்ளை, மற்றும் பலர் பயத்தில் முகத்துவாரத்திலிருந்து ஓடி வந்தனர் ஏன் அவசரமாக ஓடி வருகிறீர்கள் என்று கேட்டேன் வல்பொல ஜீப்பில் பொலிஸ் இராணுவத்தினருடன் வந்து சுட்டுப்போடுவோம் போய் விடுங்கள் என பயமுறுத்தியதாக கூறினர். அதனால் ஓடி வந்ததாக கூறினர். கொக்கிளாய் தமிழ் வாடி தீக்கிரையானது. 8 மணிக்கு முகத்துவாரத்தில் தமிழர் வாடி எரிக்கப்பட்டது. ஆகஸ்ட் 22-ம் தேதி பாதுகாப்பிற்காக குடும்பத்தை அனுப்பிவிட்டு வீட்டில் இருந்தேன். ஜீப்பும் அதன்பின் சிங்கள ஆட்களும் வந்தனர். ஜீப்பில் வல்பொல இருந்தார். நான் பயத்தில் காட்டிற்குள் ஓடிவிட்டேன். கட்டை கால்சட்டை அணிந்த வல்பொல கையில் ரிவோலர் வைத்திருந்தார். சிங்களத்தில் உரத்துச் சொன்னார். அப்போது சிங்கள ஆட்கள் என்வீட்டிற்கு வந்து கதவையுடைத்து பொருட்களை வெளியில் எடுத்துப் போட்டார்கள்: டிராக்டர் ஒன்று பின்னால் வந்து பொருட்களை ஏற்றினார்கள் டிராக்டர் வெளிக்கிட ஒருவர் சிரட்டையிலிருந்த எரிபொருளை வீட்டுக்கு தெளித்து நெருப்பு மூட்டினர். அதேபோல மற்ற வீடுகளுக்கும் தீமூட்டினார்கள். காட்டுப்பாதையால் கொக்குத்தொடுவாய்க்கு சென்றேன் அந்தநேரம் வீடும் எரிவதைக் கண்டேன். எனக்கு 4500 ரூபா நஷ்டம்.

சட்: சில்வா: 21ம் தேதி பல வீடுகள் எரிந்தது? வீடுகளும் ஒரு கடையும் எரிந்தது

சட்: சிங்கள வீடுகள் எரிந்தன? தமிழர் வீடுகள் எரிந்ததாக கேள்விப்பட்டேன். இந்த நெருப்பு சிங்கள வாடிகளுக்குப் பிடித்தது. சிங்கள வாடிகளும் எரிந்திருக்கலாமென கதைத்தார்கள்.

சட்: பெரும்பாலான சிங்களவரின் வீடுகள் எரிந்தன? இருக்கலாம்

சட்: 52 சிங்களவரின் வீடுகள் எரிக்கப்பட்டது? இருக்கலாம்

சட்: தற்செயலாக எரிந்ததாகக் கூறினீர்? ஆட்கள் கதைத்தார்கள்.

சட்: உமது வீடு எரிந்தது பற்றிப் புகார்செய்தீரா?-ஆம். என் புகாரை எழுதியவர் சிங்களவர். வல்பொலையின் பெயர் கொடுக்கவில்லை. அவருக்கு விளங்கவில்லை.

சட்: வல்பொல வந்தவர்? -ஆம்.

சட்: ஏன் பெயர் கொடுக்கவில்லை?-கொடுக்கவில்லை.

சட்: ரிவோலருடன் வல்பொல வந்தார்?-ஆம்.

சட்: அப்படியிருந்தும் நீர் வல்பொலையின் பெயரைப் பொலிசாருக்குக் கொடுக்கவில்லை?-ஆம்.

சட்டத்தரணி சண்முகலிங்கம்: முகத்துவாரத்தில் எரிந்தது தமிழ் வீடா, சிங்கள வீடா?-இரண்டும்தான். நான் போய்ப் பார்க்கவில்லை.

சட்: தமிழ் மீனவர்களுக்குப் புறம்பான வீடு, வாடி உண்டு? -ஆம், வீடும் எரிக்கப்பட்டது.

சட்: சிங்கள ஆட்களைப் பொறுத்தவரை வாடிதான் உண்டு?-ஆம்.

சட்: வீடுகள் இல்லை?-ஆம்

---

### மகோற்சவம்

[யாழ்ப்பாணம்]

வண்ணார்பண்ணை வடமேற்கு கோசாவில் பிள்ளையார் கோவில் வருடாந்த மகோற்சவம் நாளை முதல் 15-ந் திகதி வரை நடைபெறவுள்ளது.

இவ்வுற்சவத்தை முன்னிட்டு கலாவிநோதன் கே. என். கணபதிப்பிள்ளை "கந்தன் கருணை" என்னும் தொடர்கதை வில்லுப்பாட்டு தினமும் நிகழ்த்துவார்.

---

### இந்த இடம்—

(4ம் பக்கத் தொடர்ச்சி)

தெரியும்.

சட்: மற்றவர்களைத் தெரியும்? இன்ஸ்பெக்டரைத் தெரியும்

கமிஷனர்: எந்த இன்ஸ்பெக்டர்? பதவியா இன்ஸ்பெக்டர்.

கமிஷனர்: பிரதானமாக கதைத்தது வல்பொலதான்? ஆம்.

சட்: முன்பு வல்பொலவை தெரியும்? ஆம்.

சட்: வாடி எப்ப எரிந்தது? 22ம் தேதி.

சட்: 20 ம் தேதிவாடி எரிக்கப்பட்டதா? நான் முல்லைத்தீவில் இருந்தேன். எனக்குத் தெரியாது.

சட். மண்டலேஸ்வரன்: பொலிஸ் வாய்முறைப்பாட்டில் வல்பொல பெயர் சொன்னீரா? சொல்லவில்லை

சட்: ஏன் சொல்லவில்லை? உயிரைப் பாதுகாப்பதற்காக சொல்லவில்லை. அந்நேரம் பொலிசிடம் பாதுகாப்பு கேட்டுச் சென்றோம்.

சட். சில்வா: முதலில் இங்கு சொன்ன எல்லாவற்றையும், பொலிசுக்கு சொன்னதாக கூறினீர்? அப்பெயரை சொல்லவில்லை.

சட். மண்டலேஸ்வரன்: குழப்பம் இருந்ததால் வல்பொல சொல்லவில்லை? இல்லை.

சட்: அவர் பொலிசுக்கும் உதவியாக இருந்தார்? ஆம்.

சட்: முல்லைத்தீவு எம் பிக்கு எல்லாம் சொன்னீர்? ஆம்.

---

### இந்தியப்—

(4ம் பக்கத் தொடர்ச்சி)

அந்த உயர் அதிகாரி முல்லைத்தீவில் கையில் துப்பாக்கியுடன் செல்வதைக் கண்டிருக்கிறேன்- அம்பாள் கபே முதலாளியிடம் ஒரு சிங்கள ஆள் வந்து சிகரட் கேட்டார்; சிகரட் இல்லை என்றார் அவர் போய்விட்டார். இராணுவத்தினரைக் கூட்டிவந்தார். இராணுவம் வந்து பொடியனுக்கு துவக்கு சோங்கினால் அடித்தனர். ஏன் சிகரட் கொடுக்கவில்லை என்றனர்.

நீங்கள் தானே ஒவ்வொரு பைக்கட் 5 ரூபாவிற்குக் கொண்டுவந்து தருகிறீர்கள் இன்று தரவில்லை என்று பொடியன் இராணுவத்தினரிடம் சொன்னார்

'முல்லைத்தீவிலிருந்து 13 ம் மைலில், கொக்கிளாய்போகும் வழியில். அரச நிலத்தில் நான் "ஜா" பயிர் செய்கிறேன் அங்கு ஒரு குடும்பம் காவலுக்கு இருந்தது. அன்று இராணுவம் போய் வாழைகளைக் கையால் பிடுங்கினார்கள், வாழைக்குலையை வெட்டினார்கள். அங்குள்ள தமிழ்க் குடும்பத்தையும் அடித்துக் கலைத்தார்கள், கொட்டிலைப் பிடுங்கி விட்டார்கள், இன்றுவரை அந்தத் தமிழ்க் குடும்பத்தினரை நான் காணவில்லை. நான் பயந்து இராணுவத்திடமோ பொலிஸிடமோ போகவில்லை. எம். பியிடம் மட்டும் போய் சொன்னேன் பொலிஸிற்கு புகார் செய்ய சென்றால் கண்டில் அடைத்துவிடுவார்கள்.

# இஸ்ரேல் படைகள் தென்லெபனானைவிட்டு வெளியேற ஆரம்பித்துள்ளன

பெய்ரூட், ஏப். 4

தென்லெபனானில் அண்மையில் கைப்பற்றிய பிரதேசமொன்றிலிருந்து இஸ்ரேலியப் படைகள் வெளியேற ஆரம்பித்துள்ளன என்று லெபனான் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்தவார இறுதியிலிருந்தே இப்படைகள் சிறிது சிறிதாக வெளியேறத் தொடங்கிவிட்டன என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

இதே வேளையில் தென்லெபனானில் ஐக்கிய நாடுகள் சபையின் அமைதி காக்கும் படைகளின் கண்காணிப்பில் அமைதி நிலவி வருகின்றது என்று ஐ. நா. பொதுச் செயலாளர் டாக்டர் வால்ட்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

அங்கு இடையிடையே துப்பாக்கி வெடிச்சத்தங்கள் கேட்டு வருகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது. [இ]

## ஹைதராபாத்தில் 200 பேர் கைது

ஹைதராபாத், ஏப். 4

ஆந்திரப் பிரதேசத்தைச் சேர்ந்த ஹைதராபாத்திலும் செகந்தராபாத்திலும் வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட்டதாக 200 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று மூன்றாவது நாளாக நடைபெற்ற கலவரத்தை அடக்குவதற்கு போலிசார் சுட்டதில் 9 பேர் பலியானதும், 80 பேர் காயமடைந்ததும் தெரிந்ததே. [இ]

## சோமசுந்தரம் கமிஷன் மே மாதம் அறிக்கை சமர்ப்பிக்கும்

சென்னை, ஏப். 4

கடந்த அக்டோபர் மாதம் 30ம் திகதி முன்னாள் இந்திய பிரதமர் திருமதி இந்திரா காந்தி தமிழ் நாட்டுக்கு விஜயம் செய்தபோது கறுப்புக் கொடி காட்டப்பட்டபோது இடம்பெற்ற அசம்பாவித சம்பவம் பற்றி விசாரணை செய்யும் நீதிபதி சோமசுந்தரம் கமிஷன் இம்மாத இறுதிக்குள் தமது விசாரணையை முடித்து விடும் என்று தெரிவிக்கப்பட்டது.

அடுத்தமாத நடுப்பகுதியில் இக் கமிஷன் தமது அறிக்கையை அரசிடம் சமர்ப்பிக்கும்.

அறிக்கை கிடைத்ததும் அறிக்கையை பரிசீலனை செய்த பின்னர் தமிழக அரசு மேல் நடவடிக்கையை மேற்கொள்ளும் என்று அரசாங்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார். [இ]

## முத்துராமன் இவ்வாரம் கொழும்பு வருவார்

[வெள்ளவத்தை]

இலங்கை வரவிருந்த நடிகர் முத்துராமன், நடிகை சந்திரகலா ஆகியோரின் வருகை பின்போடப்பட்டுள்ளது.

"வருவான் வடிவேலன்" படப்பிடிப்புக்காக இலங்கை வரவிருந்த கலைஞர்கள் படப்பிடிப்பின் காரணமாக இவ்வாரம் கொழும்புக்கு வருவார்கள்.

மேற்படி தகவலை முத்துராமன் ரசிகர்மன்றத் தலைவர் திரு. ஏ எஸ் பிலிப் தெரிவித்தார். கதிர்காமத்தில் படப்பிடிப்பு நடைபெறும். [உ]

### ஆசிரியருக்கு கடிதம்

துண்டிமயானம்;

## அதிகாரிகள் கவனிப்பரா?

யாழ்ப்பாண மாநகரசபையின் எல்லையுள் மிகவும் பின்தங்கிய பிரதேசமாகக் கணிக்கப்படும் துண்டி அரச வீடமைப்புத் திட்டத்திற்கு மிக அருகில் இந்த மயானம் ஒன்று இருந்துவருகிறது. இது மிகவும் சுகாதாரக் கேடான ஒரு விடயமாக இருப்பதனால், இதனை தற்சமயம் இரண்டு மயானமாக இருந்துவரும் நிலைமை மாற்றி ஒரே இடத்தில் அமைக்கும்படி பல தடவைகள் விண்ணப்பம் செய்தும் இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் எடுத்ததாகத் தெரியவில்லை.

இங்கு இரண்டு மயானம் எனக் குறிடப்படுவது கொழும்புத்துறையின் கிழக்குப் பகுதியில் மற்றோர் மயானம் இருப்பதையே மேற்படி துண்டியில் அமைந்துள் மயானத்தில் தகனக்கிரியைகளை மேற்கொள்ளும் போது அதில் இருந்து புறப்படும் புகை துர்மணத்துடன் அருகிலுள்ள வீடுகளுக்குள் புகுகின்றது. பல வீடுகளின் முன்புறக் கதவால் உட்புகுந்து பின் புறக்கதவால் வெளிவருகிறது.

இது இவ்வாறிருக்க அரைகுறையாக எரியும் பிணங்களை அருகிலுள்ள வீட்டு நாய்கள் வீடுகளுக்கு இழுத்து வருகின்றன. இது குறித்து யாழ், முன்னாள் மேயரின் கவனத்திற்குக் கொண்டு வந்தபோது மதில் போட்டுத்தருவதாக உறுதியளித்தார். ஆனால் மேற்படி குறைகளை நீக்க சரியான தொரு வழியாகவும் அமையவில்லை. எனவே மேற்படி விடயம் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விசேட கவனம் செலுத்தி உடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

இங்ஙனம்

ஏ. எஸ். மரியராஜா

கொழும்புத்துறை

# 'கூட்டணியின் சரியான போக்கிற்கு ஆதரவளிப்போம்'

## ஏழாலையில் வி. பி.

(யாழ்ப்பாணம்)

"தமிழினம் சுயநிர்ணய உரிமைபெற்று சுயகௌரவத்துடன் வாழ செந்தமிழர் இயக்கம் அயராது பாடுபடும். தமிழ் மக்களின் பேராதரவைப் பெற்றுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியை நேச சக்தியாகக் கருதி எமது இயக்கம் அதன் சரியான போக்கிற்கு ஆதரவளிக்கும்"

இவ்வாறு செந்தமிழர் இயக்க அமைப்பாளர் திரு. வி. பொன்னம்பலம் ஏழாலையில் இயக்கக் கிளையை அங்குரார்ப்பணம்செய்துவைத்துப் பேசுகையில் கூறினார்.

இக் கூட்டம் திரு இ. சின்னத்தம்பி தலைமையில் நடைபெற்றது.

திரு. வி. பி. தொடர்ந்து பேசுகையில், "தமிழினம் ஒரு தனித்தேசிய இனம் என்பதனை அங்கீகரிக்க முன்வராத கம்யூனிஸ்ட் கட்சி, தமிழரின் சுயநிர்ணய உரிமைக்கு ஆதரவு வழங்குவது போல் போலித்தனமாக நடந்துகொள்வதனை தமிழ்மக்கள் புரிந்துகொண்டு விட்டார்கள்" என்றார்.

செந்தமிழர் இயக்கத்துக்கு வடக்கு கிழக்கு பகுதிகளைய தமிழ் மக்கள் அளித்துவரும் பேராதரவு நம்பிக்கையை வலுப்படுத்துகின்றது" என்றும் திரு. வி. பி. சொன்னார்.

கிளைத் தலைவராக திரு. இலட்சுமிகாந்தனும் செயலாளராக திரு. ஆனைகந்தரமும் பொருளாளராக திரு. இ. லட்சுமிகாந்தனும் தெரிவானார். (உ)

## 'சிங்களப் படங்கள் சர்வதேச பரிசு பெறக் காரணம்?'

### வானொலிக் கலைஞர் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

"இந்தியாவிலும், இலங்கையிலும் தயாரிக்கப்படும் தமிழ் சினிமாப் படங்கள் யாவும் மேடை நாடகங்களைத் தழுவியே தயாரிக்கப்பட்டுவருகின்றன. மேடை நாடகம் வேறு, சினிமா வேறு, வானொலி நாடகம் வேறு என்பதனை நடிகர்கள் உணர்ந்து நடிக்கவேண்டும். தமிழ்த் திரைப்படங்களைப் பொறுத்தவரை இந்தியாவிலும் சரி, இலங்கையிலும் சரி மேடை நாடக நடிகர்களே சினிமாவிலும் நடிக்கின்றனர். இது தவறானதாகும்." இவ்வாறு சுன்னாகம் கிளிலனி வடக்கு ஜனசக்தி இளம் விவசாயிகள் கழகத்தினரால் கழக முன்னணியாளர் திரு. ஐ. முருகையா தலைமையில் நடாத்தப்பட்ட 'ஈழத்து திரைப்பட வளர்ச்சி' என்னும் பொருள்பற்றிய கருத்தரங்கில் இலங்கை வானொலி தமிழ் நாடகத் தயாரிப்பாளர் திரு கே. எம். வாசகர் கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசுகையில், "இலங்கை சிங்கள நாடக.சினிமாத்துறைகளை எடுத்துக் கொண்டால் சிங்கள நாடக நடிகர்கள் வேறாகவும், சிங்கள திரைப்பட நடிகர்கள் வேறாகவும் நடித்துவருகிறார்கள். சிங்கள நாடக நடிகர்கள் சினிமாவில் நடிப்பதில்லை. இலங்கை சிங்கள சினிமாவை எடுத்துக் கொண்டால் சிங்கள திரைப்படங்கள் சர்வதேச ரீதியில் பரிசில்கள் பெற்றுள்ளன. இதற்குக் காரணம் சிங்கள சினிமா நடிகர்கள் நடித்தமையேயாகும். இந்திய தமிழ்த் திரைப்படங்கள் சர்வதேசரீதியில் பரிசில்கள் பெறுவதற்குக் காரணம் மேடை நாடக நடிகர்கள் நடித்தமையேயாகும். இலங்கை தமிழ்ச் சினிமாத் துறையை எடுத்துக்கொண்டால் தற்பொழுதுதான் ஓரளவு முன்னேற்றம் ஏற்பட்டு வருகிறதென்றார்.

இக்கருத்தரங்கில் திருவாளர்கள் அ. சிவபாதம், வி. எம். குகராஜா, தா. சண்முகநாதன், சி. சதானந்தன் ஆகியோரும் உரை நிகழ்த்தினார்கள்.

கழகச் செயலாளர் திரு. க. செல்வநாதன் நன்றியுரை வழங்கினார். (கெ-உ)

### ஆசிரியர் உரிமை பறித்து

# தார்மிக ஆட்சி நடத்துவது சாத்தியமாதல் எவ்விதம்?

## ஆசிரியர்சங்க வைரவிழாவில் கேள்வி

[யாழ்ப்பாணம்]

"ஆசிரியர்களின் வேலைநிறுத்தத்தைத் தடைசெய்வதன் மூலம் ஆசிரியர்களின் உரிமைகள் பறிக்கப்படுகின்றன. ஆசிரியர்களதும் தொழிலாளரதும் உரிமையைக் குழிதோண்டிப் புதைக்கின்ற வெள்ளை அறிக்கைக்கு எதிராக நாம் போராட வேண்டும்"

இவ்வாறு நேற்று யாழ். இந்துக்கல்லூரி மண்டபத்தில் யாழ் மாவட்டக்கிளைத்தலைவர் திரு. எஸ். வே. சுந்தரலிங்கம் தலைமையில் இடம்பெற்ற வடமாகாண ஆசிரியர் சங்கத்தினதும் இலங்கை ஆசிரியர்சங்க யாழ் மாவட்டக் கிளையினது வைரவிழா மலர் வெளியீட்டு விழா ஆகியவற்றில் கலந்துகொண்டு உரையாற்றிய இலங்கை ஆசிரியர் சங்கத் தலைவர் திரு எச் என் பெர்னாண்டோ கூறினார்.

அவர் தொடர்ந்து தமது உரையில், "தார்மீக சமுதாயத்தை உருவாக்குவதாகப் பறைசாற்றிக்கொள்ளும் இந்த அரசு வெள்ளை அறிக்கையின் மூலம் சாதாரணதர தொழிலாளரின் உரிமைகளைப் பறித்தெடுக்க முயல்கின்றது.

"இவ்வறிக்கை சட்டமாவதற்கு முன்னரே தொழிலாளரின் உரிமைகள் பறிக்கப்படுகின்றன. ஊர்வலங்கள் நடாத்துவதற்கும், பெரிய சுவரொட்டிகள் ஒட்டுவதற்கும் கூடத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. எமது கல்விஅமைச்சர் திரு. நிஸங்க விஜயரத்தின ஆசிரியர்கள் வேலைநிறுத்தம்செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது என்று கூறியுள்ளார். இதன் மூலம் ஆசிரியர்களது உரிமைகள் பறிக்கப்படுகின்றன. இதுதான் புதிய அரசின் தார்மீகக் கொள்கையா?

"இவ் வெள்ளை அறிக்கை நடைமுறைப்படுத்தப்படும் பட்சத்தில் தனியார்துறை ஊழியர் ஒருவர் வேலைநீக்கம் செய்யப்பட்டால் அந்தத் தொழிலாளிக்காக எவரும் குரல்கொடுக்க முடியாது. தொழிற்சங்க வாதிகள் கூட இதைத் தடுக்கமுடியாது.

இவ்வறிக்கை மசோதா வடிவிலேயே வந்துள்ளது இவ்வறிக்கை இந்த நாட்டில் உழைக்கின்ற தொழிலாளவர்க்கத்தையே பாதிக்கின்றது. ஆசிரியத்தொழில் புரிகின்ற நாம் எமக்களிக்கப்பட்ட சில சலுகைகள் கூட தொழிலாளரது போராட்டத்தின் பயனாகத்தான் ஏற்பட்டது.

"தொழிலாளரது போராட்டமே தொழிலாளர்களது உரிமைகளுக்கு வித்தாகஅமைந்தது. இன்றையகாலகட்டத்தில் அடிமை நிலையிலுள்ள ஆசிரியர்களாகிய நாம் இவ்வறிக்கையால் மேலும் நசுக்கி ஒடுக்கப்படுவோம்.

"இந்த நாட்டில் வசதிபடைத்த வசதிஇல்லாத என இருவகைப் பாடசாலைகள் உள்ளன. ஆட்சிப்பொறுப்பை ஏற்கின்ற எந்த அரசு வந்தாலும் ஏழைப் பாடசாலைகள் ஏழைப்பாடசாலைகளாகவே இருக்கின்றன. இந்நிலைமையைப் பற்றி எண்ணிக்கூடப் பாராத இன்றைய அரசு தனியார் துறைப் பாடசாலைகளை ஊக்குவிக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. 1960ம்ஆண்டு தனியார்துறைப் பாடசாலைகளை அரசு பொறுப்பேற்றபோது கம்பிவேலி போட்டுத் தடைசெய்தவர்களே இன்று அரசின் ஆலோசகர்களாக இருக்கின்றார்கள். இத்தகையவர்கள் கல்வியை ஒரு சாராருக்கு மட்டுமே உரித்தானதாக்குகின்ற பயங்கர நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்" (கா-உ)

## நிர்வாகிகள்

[திருநெல்வேலி]

கொக்குவில் நாமகள் வித்தியாசாலை பழைய மாணவர் சங்க நடப்புவருட நிர்வாகிகள் பின்வருமாறு:

போஷகர்: திரு எம். சிவசிதம்பரம் எம் பி, திரு. சி. அருணாசலம் மாஜி எம். பி, திரு சி நல்லையா, திரு. எஸ் எம் அருணாசலம், திரு. ரி. கனகரத்தினம், தலைவர்: ஏ பத்மநாதன், உப தலைவர்: செல்வி. சண்முகதாஸ், செயலாளர்: ச பத்மநாதன், உதவிச் செயலாளர்: பொ. யோகநாதன், சி தங்கராசிங்கம், பொருளாளர்: க. வருணகுலசிங்கம். [உ]

# நாயைப்போல ...

(3-ம் பக்கத்தொடர்ச்சி)
பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

பின் அவர்கள் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த மல்லாவிக் கிராமத்திற்குச் சென்றனர். இது மாங்குளம் பொலிஸ் பகுதியைச் சேர்ந்த கிராமம்.

அங்கு தர்மலிங்கம் என்ற இளைஞர் ஒருவரைக் கைது செய்தனர். அவரின் இருப்பிடம் எவருக்குமே தெரியாமலிருந்தது. 78 பெப்ரவரி 11ந் தேதி நான் பாதுகாப்பு அமைச்சருக்கும் வவுனியாப் பொலிஸ் அதிபருக்கும், தர்மலிங்கத்தை விடுதலை செய்யவேண்டுமென்றும் வவுனிக்குளம் பகுதிக்கு மன்னார்ப் பொலிசார் செல்வது நிறுத்தப்படவேண்டும் என்றும் வீடுகள் சோதனையிடப்படுவதும் மக்கள் கைது செய்யப்படுவதும் நிறுத்தப்படவேண்டுமென்றும் தந்தி அடித்தேன்.

எனது தந்திக்கு நடவடிக்கை எடுப்பதற்காக பொலிஸ்மா அதிபருக்கு அனுப்பிவைத்திருப்பதாக பிரதி பாதுகாப்பு அமைச்சர் எனக்குப் பதில் அனுப்பியிருந்தார். வவுனியா பொலிஸ் அதிபர் எதுவித பதிலும் அனுப்பவில்லை. அவர் அச்சமயம் மாவட்டத்திற்கு வெளியில் இருந்தார். நான் இரு தடவை உதவிப் பொலிஸ் அதிபருக்கும் புகார் செய்தேன். ஆனால் மன்னார்ப் பொலிசார் வவுனிக்குளத்திற்குச் செல்வது நிறுத்தப்படவுமில்லை. தர்மலிங்கம் விடுதலை செய்யப்படவுமில்லை. அவரைப் பத்துநாட்கள் பாதுகாப்பில்வைத்து சித்திரவதை செய்து கொடுமைப்படுத்தி கைகளை பின்பக்கமாக கட்டி இருதடவை அவரை அவ்விடத்தில் தொங்கவிட்டனர். ஒரு தடவை 7 மணி நேரமும், மறுதடவை 4 மணி நேரமும் தொங்கவிட்டனர். பின் அவர் மன்னார் நீதவான் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டார். அவரின் நிலைமையைப் பார்த்த மன்னார் நீதவான் அவரை ஆஸ்பத்திரியில் அனுமதிக்குமாறு உத்தரவிட்டார்.

## நாயைப் போல நாக்கினால் நக்கி

அவரது நிலைமை மோசமாயிருந்ததால், மன்னார் வைத்திய அதிகாரி, அவரை உடனே யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தார். அவர் சிறைச்சாலை அதிபர் முன்னிலையில் ஒரு சத்தியக் கடதாசி முடித்தார். அதில் அவருக்கு இழைத்த சித்திரவதை பற்றி கூறப்பட்டிருந்தது. அவரது விரல்கள் விக்கமடைந்திருந்ததினால் அவரினால் கையெழுத்திட முடியாமல்போய்விட்டது. அதனால் கையெழுத்திட முடியாமல் போய்விட்டது. அதனால் சத்தியக்கடுதாசியில் பெருவிரல் அடையாளமிட்டார். பொலிஸ் பாதுகாப்பில் இருந்தபோது அவரது உணவைச் சாப்பிட நாலுநாட்கள் விரல்களை பாவிக்க முடியாமல் அவர்கஷ்டப்பட்டார்.

மன்னார் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஹெட்டி ஆராச்சி, நாயைப்போல உணவை நாக்கினால் நக்கிச் சாப்பிடும்படி தருமலிங்கத்திற்கு கட்டளையிட்டார். யாழ்ப்பாணத்தில் இக்கமிஷன் விசாரணை நடைபெற்றுக் கொண்டிருந்த சமயத்திலேயே இச் சித்திரவதை மன்னார்ப் பொலிஸ் நிலையத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

78 பெப்ரவரி 24ம் தேதி நான் இவ்விஷயத்தை பாராளுமன்றத்தில் கொண்டுவந்தேன. ஹன்சாட்டிலிருந்து அதனை வாசிக்கின்றேன். 70 மைல்களுக்கு அப்பால் உள்ள யாழ்ப்பாணத்தில் கமிஷன் விசாரணை நடைபெற்றுக் கொண்டிருந்தபோது மன்னார் பொலிஸ் உயர் அதிகாரிகள் என்ன கொடுமைகளைச் செய்தார்கள் என்பதைக் கமிஷன் அறிந்துகொள்ளலாம்.

நான் தேசிய அரசுப் பேரவையில் இதனைத்தெரிவித்ததும் உடனடியாக மன்னார் பொலிசார் வவுனிக்குளப் பகுதிக்குச் செல்வது நிறுத்தப்பட்டது.

நான் 1976ல் தமிழ்த் தொழிற்சங்கக் கூட்டணியின் தலைவராக நியமிக்கப்பட்டேன் இச்சம்மேளனம் 1974ல் ஆரம்பிக்கப்பட்டது. தமிழ்த் தொழிற்சங்கங்களை ஒன்றிணைப்பதற்காகவே இது ஆரம்பிக்கப்பட்டது.

1956ம் ஆண்டு தனிச் சிங்களச் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பின்னரே தமிழ்த் தொழிற்சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன. தமிழ்ப்பேசும் தொழிலாளரின் நலனைப் பாதுகாக்கவே நிறுவப்பட்டது அரசாங்க சேவையில் உள்ள தமிழ் ஊழியர்கள் சேவை, பதவி உயர்வில் பல்வேறு கட்டுப்பாடுகள் போடப்பட்டதாகக் கூறினார்கள்.

எங்கள் சங்கத்தின் உறுப்பினர்களாக உள்ள பெரும்பாலானவர்கள் ஆகஸ்ட் கலவரத்தில் கொலைசெய்யப்பட்டனர். சித்திரவதை செய்யப்பட்டனர். வீட்டிலிருந்து வெளியேற்றப்பட்டனர். வீடுகள் எரித்து நாசமாக்கப்பட்டன. உடமைகள் கொள்ளையடிக்கப்பட்டுச் சேதமாக்கப்பட்டன.

## உடுவில் அம்பாள் உற்சவம்

(யாழ்ப்பாணம்)
உடுவில் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வர சுவாமி தேவஸ்தான மகோற்சவம் எதிர்வரும் 12ம் திகதி ஆரம்பமாகிறது. 21ம் திகதி ரதோற்சவமும், 22ம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறும் திருவிழாக் காலங்களில் விசேட சமய நிகழ்ச்சிகள் நடைபெறும். (உ)

## நன்கொடைப் பணம் கிடைக்கவில்லையாம்

(பண்டத்தரிப்பு)
பண்டத்தரிப்புப் பட்டணசபை பிரதேசத்திலுள்ள சனசமூக நிலையங்களுக்கு கடந்த 1977ம் ஆண்டிற்கான அரசாங்க நன்கொடைப் பணம் இதுவரை வழங்கப்படவில்லை என்று பலத்த புகார் தெரிவிக்கப்படுகின்றது.

நன்கொடை வழங்கும் பொருட்டு கடந்த டிசம்பர் மாதத்தில் சனசமூக நிலைய பிரதிநிதிகளை பட்டணசபை அலுவலகத்திற்கு அழைத்து அறிக்கைப் புத்தகங்கள் பரிசோதிக்கப்பட்டு, உரிய பத்திரங்களும் நிரப்பி வாங்கப்பட்டனவாம். ஆனால் யாழ். மாவட்ட உதவி உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தினர் இதுவரை உதவி நன்கொடைப் பணத்தை பண்டத்தரிப்பு பட்டினசபை விசேட ஆணையாளருக்கு அனுப்பிவைக்கவில்லை என்று பட்டணசபை அதிகாரிகள் தெரிவித்தனர். (உ)

## இட நெருக்கடி

(மட்டக்களப்பு)
மண்முனை மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள, நெற்சந்தைப்படுத்தும் சபையின் மண்டபத்தில் உத்தரவாத விலைத் திட்டக் களஞ்சியத்தில் இட நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

கடந்த சில ஆண்டுகளாக நெல் விளைச்சல் அதிகரித்துள்ளதாலேயே இவற்றை சேமித்து வைப்பதற்கான களஞ்சியப் பிரச்சினை எழுந்துள்ளது. இதனால் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்யப்படும் நெல்லை களஞ்சிய வளவில் அடுக்கி வைக்கப்படவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது

மேற்படி இட நெருக்கடியைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் மேலும் ஒரு களஞ்சியத்தை நிறுவுவதற்கு ஆவன செய்யுமாறு மண்முனை மேற்கு கிராம முன்னேற்றச் சங்கங்களின் சமாஜ செயலாளர் திரு ச. இரத்தினசிங்கம், மட்டக்களப்பு முதல் எம். பி. திரு செ. இராசதுரை மூலமாகக் கேட்டுள்ளார். (உ)



ஈழத்தின் தயாரான முதல் சினிமாஸ்கோப் படமான "நெஞ்சுக்குத் தெரியும்" படத்தை ஹெந்தலை விஜயா ஸ்ருடியோவில் பார்த்து மகிழ்ந்தபின் நடிகர் திலகம் திரு. சிவாஜி கணேசன் ஸ்ருடியோவை விட்டு வெளியே வந்தபோது எடுக்கப்பட்ட படம் நடிகர் திலகத்தின் இடப்புறமாக "நெஞ்சுக்குத் தெரியும்" கதாநாயகன் நல்லூர் சி. மனோகரனும் வலபுறமாக பட இயக்குநர் திரு. ஆர். சண்முகநாதனும் காணப்படுகின்றனர்

படப்பிடிப்பு:- ஜே. என். பாக்கியராஜா.


வெலிங்டன்
(யாழ். நகர்)
தினசரி 6-30, 9-30
சிவாஜி—ஜெயலலிதா
தெய்வமகன்

Rio (Jaffna) (phone:7607)
Last day
Daily 4 Shows
GOLDEN NEEDLES

நாகம்ஸ்
(கன்னாகம்)
தினசரி: 6-45, 10-00
எம். ஜி. ஆர். —விஜயா நடித்த
விவசாயி

4-வது வாரம்
புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 6-30, 9-45,
சனி, ஞாயிறு 2-30
ரஜனிகாந்த்-ஸ்ரீதேவி
மூன்று முடிச்சு

சாந்தி (யாழ். நகர்) போன்: 7642,
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
சிவாஜி...... பத்மினி...... தங்கவேலு
கோடீஸ்வரன் (புதிய பிரதி)

5-4-78 நிதியுதவிக் காட்சி
பி. ப. 2-30 மாலை 6-30 மட்டும் நீலவானம்

அடுத்த வெளியீடு: பத்தி பரவசமூட்டும் A. P. நாகராஜனின்
கந்தன் கருணை [புராண - வண்ணச் சித்திரம்]

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ரவிச்சந்திரன், கே. ஆர். விஜயா, விஜயகுமார்- நிர்மலா, அசோகன் நடித்த
ஜானகி சபதம்

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி — சௌகார்ஜானகி நடித்த
மகாகவி காளிதாஸ்

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.—வாணிஸ்ரீ நடித்த
ஊருக்கு உழைப்பவன்

Regal (Jaffna) Daily 4-45, 7-00 and 9-30 p.m.
DEAN JONES
in
MR. INVISIBLE
(Scope Color Action)
From 6-4-78
ZORRO AT THE COURT OF SPAIN
(color)

காட்சிக்கு காட்சி ஹவுஸ்புல்
இதன் மர்மம் என்ன?
ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
4 காட்சிகள்
எம்.ஜி.ஆர். - பத்மினி - வீரப்பா நடித்த
விக்கிரமாதித்தன்
(புதிய பிரதி)

ராணி (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஏ. ஈ. மனோகரன்-சந்திரகலா நடித்த
வாடைக்காற்று

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - விஜயா
கிரகப்பிரவேசம் (கலர்)

லிடோ (யாழ். நகர்)
போன் 7696
முத்துராமன், சிவகுமார். சுஜாதா நடித்த
உறவு சொல்ல ஒருவன்

# 'எனக்கு நஷ்டம் ரூ. 14000! பொலிஸ் அறிக்கை ரூ. 1,600 என்று கூறுகிறது'

மாகோ...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

உடைத்து, இரும்புப் பெட்டியை எடுத்துச்சென்றனர். பொலிசார் அந்நேரம் கூட சுடவில்லை பார்த்துக்கொண்டிருந்தனர்.

"பஸ்ஸிற்கு காசு கொடுக்கும்படி கூறினர்கள் அவெர்களிடம் காசு இருக்கவில்லை. என்னிடம் 60 ரூபா இருந்தது. நான் 20 ரூபா கொடுத்தேன். நூரீன் பஸ்ஸை செலுத்திவந்தார்.

## கல்கள், போத்தல்கள் வீசினுர்கள்

"மதவாச்சியில் போத்தல்கள் எறிந்தார்கள். நான் கடந்த 4 வருடமாக மனைவியை பிரிந்து வாழ்கிறேன், என் பிள்ளைகளுக்கும் நான் தான் தாயாராக இருந்தேன். பஸ்ஸில் பிள்ளைகள் கல்லெறியிலிருந்து தப்பினர்கள்.

கடந்த வருடம் என் வருமானம் 21,000 எல்லா உடமைகளும் இழந்தேன். நான் ஐந்து வருடம் கொழும்பில் இருந்தேன். அண்மையில் மாகோ வந்தேன். மாகோ பொலிஸ்நிலையத்தில் நான் புகார் செய்யாததினுல் என் கம்பெனி சாமான்களுக்கு என்னைப் பணம் கட்டுமாறு கேட்டது.

கமிஷனர்: புகார் செய்ய பொலிசார்மறுத்ததாக சொன்னீரா? ஆம். யாழ்ப்பாணத்தில் புகார்செய்தேன்.

"நான் மகோ பொலிஸுக்குப் போனேன். அவர்கள் புகார் எதுவும் இல்லையென்றனர்.

"5 ஞுத்தல் தேயிலை பக்கட் மட்டும் இருந்தது. 88,000 ரூபாவை நான் கொடுக்க வேண்டியிருந்தது. நான் எம். பி., ஏ. ஜி. ஏ.க்குப் புகார் செய்தேன். எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. பிரதமர் பிரேமதாசாவுக்கும் அறிவித்துள்ளேன்."

[யாழ்ப்பாணம்]

கெக்கிராவை புகையிரத நிலைய அதிபர் கின்னப்பு ஈனசபை நேற்று சன்சோனி கமிஷன்முன் சாட்சியமளிக்கையில் தெரிவித்ததாவது:

"நான் தற்போது கொச்சிகடை ரயில்நிலைய அதிபராக இருக்கிறேன். ஆகஸ்ட் 18-ம் திகதி கெக்கராவையில் கொள்ளை நடந்ததை கண்டேன். நான் பொலிஸ் நிலையத்தில் நின்றேன். பொலிஸார் ஒரு பக்கத்தை பார்த்துக் கொண்டிருந்தனர். நான் மற்றப் பக்கத்தை பார்த்துக் கொண்டிருந்தேன்.

கமிஷனர்; பொலிஸார் பார்த்துக் கொண்டிருந்தார்களா?-ஆம் கெக்கராவையிலிருந்து 200 அகதிகளுடன் அனுராதபுரத்திற்கு வந்தேன். என் வீடு கொள்ளை அடிக்கப்பட்டதாக ஆகஸ்ட் 19-ம் திகதி அறிந்தேன் 14,000 ரூபா எனக்கு நஷ்டம் ஏற்பட்டது. என் இலாகாவில் கடன் எடுக்க பொலிஸ் அறிக்கை தருமாறு கேட்டார்கள். கெக்கராவை பொலிஸார் அறிக்கை தந்துள்ளார்கள். அந்த அறிக்கையில் என் நஷ்டம் 1,600 ரூபா என்று எழுதப்பட்டுள்ளது.'

## பொங்கல் விழா

[சங்கானை]

வலிமேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அறுவடையும் பொங்கல் விழாவும் எதிர் வரும் 8ந் தேதி சங்கானை துறட்டிப்பனை அம்மன்கோவிலில் கொண்டாடப்படவுள்ளது.

சங்கானை உதவி அரசாங்க அதிபர் திரு. எம். சுப்பிரமணியம் தலைமையில் காரியாலயத்தில் தொகுதி அபிவிருத்தி பற்றி நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்திலேயே பொங்கல் விழா பற்றித் தீர்மானிக்கப்பட்டது.

வலி மேற்குப் பிரிவு கிராம சேவகர்கள், சமூகசேவை உத்தியோகத்தர், விவசாய உத்தியோகத்தர், உள்ளூராட்சி மன்ற விசேட ஆணையாளர்கள் பங்குபற்றினர்.

இப்பகுதியில் நடைபெறவுள்ள அபிவிருத்திகளில் அவ்வப்பகுதி மக்கள் சிரமதானப் பணிகளில் ஈடுபட்டு ஒத்தாசை புரிய முன்வருவரென்ற நம்பிக்கையும் தெரிவிக்கப்பட்டது. (உ)

## டக்ஸியில்—

(2ம் பக்கத் தொடர்ச்சி)

டேன். யாழ்ப்பாணத்தில் இருந்து இந்த டாக்ஸிகளில் கைக்குண்டுகள் வந்திருப்பதாகத் தகவல் கிடைத்திருப்பதாகக் கூறினர். அங்கு டாக்ஸிகள் நிற்பதாகவும் சோதனையிட்டுப் பார்க்கும்படியும் அவரிடம் சொன்னேன். அவர் சென்றுவிட்டார்.

## இன்று உற்சவ ஆரம்பம்

[யாழ்ப்பாணம்]

நீர்வேலிக் கந்தசுவாமி கோவில் உற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. மாலை 7 மணிக்கு இரவு உற்சவம் ஆரம்பமாகும். இரவு வலி. கிழக்கு உதவி அரசாங்க அதிபர் சொல்லின் செல்வன் சொக்கலிங்கம் "திருவடிச் சிறப்பு" என்னும் பொருள் பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்துவார். [அ]

# இடதுசாரிதொ. சங்கங்களின் மேதின ஏற்பாடுகள்

(வெள்ளவத்தை)

இடதுசாரிக்கட்சி தொழிற்சங்கள் இவ்வாண்டு மேதினத்தை சிறப்பாகக் கொண்டாட ஏற்பாடுகள் செய்து வருகின்றன.

அரசாங்க சார்பு தொழிற்சங்கள் மேதினவிழாவை களாசார விழாவாகநடத்த முடிவு செய்துள்ளதுடன், மேதினத்திற்கு அரசாங்கம் பஸ்களை வழங்க வேண்டாம் என்ற கோரிக்கையை விடுத்துள்ளதுடன் சகல திரைப்பட மாளிகைகளிலும் ஐம்பதுசத கட்டணத்தில் மக்களை அனுமதிக்குமாறு அரசாங்கத்தை கேட்டுள்ளது.

அரசாங்க தொழிற்சங்கங்கள் அமைதியாக மேதினத்தை நடத்தும் அதேவேளையில் அரசுக்கு எதிரான தொழிற்சங்கங்கள் பெரும் ஆர்ப்பாட்டத்துடன் மேதின ஊர்வலத்தையும் நடத்தவிருப்பதாக அறியப்படுகிறது ஊர்வலத்திற்கு அரசு தடைவிதித்தால் அத் தடையையும் மீறி ஊர்வலத்தை நடத்துவதென முடிவு செய்துள்ளனவாம்.

சமசமாஜக்கட்சித் தொழிலாளர் சம்மேளன பொதுச் செயலாளர் திரு பட்டி வீரக்கோன், கம்யூனிஸ்ட்கட்சித் தொழிற்சங்க சம்மேளன பொதுச்செயலாளர் திரு பியதாஸ ஆதிபொல ஆகியோர் மேதினத்தன்று ஊர்வலத்தையும் பொதுக்கூட்டத்தையும் வெகுசிறப்பாக நடத்தப்போவதாக உறுதியுடன் தெரிவித்தனர். [அ]

## கலைப்பிரிவில் அதிக சித்தி

[யாழ்ப்பாணம்]

சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் இருந்து கலைப்பிரிவில் பதினேழு மாணவர்களும் விஞ்ஞானப் பிரிவில் பதினன்கு மாணவர்களும் பல்கலைக்கழகத்தில் கல்விபெறத் தெரிவாகியுள்ளனர். வடமாகாணத்தில் கலைப்பிரிவில் மிகக் கூடிய பிள்ளைகள் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இருந்தே தெரிவு செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இக்கல்லூரியில் இருந்து ஐந்தாம் வகுப்புப் புலமைப் பரீட்சையில் பன்னிருவரும் ஒன்பதாம் வகுப்புப் புலமைப் பரீட்சையில் எண்மரும் கடந்த ஆண்டு தெரிவாகினர் என்பது குறிப்பிடத்தக்கது. [அ]

## தமிழ்மொழி மூலம் பயிற்சி

(வெள்ளவத்தை)

கொழும்பிலுள்ள கடற்தொழில் பயிற்சி நிறுவனத்தில் தமிழ் மொழிமூலம் பயிற்சி அளிக்கப்படும் மீன்பிடிப் பயிற்சி, இயந்திரப் பயிற்சி ஆகிய துறைகளில் இரு வருடகாலப் பயிற்சி அளிக்கப்படும்.

ஜூன் மாதம் முதல் ஆரம்பிக்கப்படவிருக்கும் இப்பயிற்சிக்கான விண்ணப்பங்கள் இம்மாதம் 7 ந் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படும். (அ)

## இராமகிருஷ்ண பரமாச்சாரியர் பற்றிய படம்

[யாழ்ப்பாணம்]

இராமகிருஷ்ண பரமாச்சாரியாரின் முழுநீள திரைப்படத்தை வடபகுதி முழுவதும் திரையிடுவதற்கு பருத்தித்துறை சாரதாதேவி சமிதி நடவடிக்கை எடுத்துள்ளது.

இது இரண்டரை மணித்தியாலங்கள் காட்டக்கூடிய 16 மில்லிமீட்டர் படமாகும்.

இப்படத்தின் பிரதி ஒன்றை மட்டக்களப்பு இராமகிருஷ்ண ஆச்சிரமம் பருத்தித்துறை சாரதாதேவி ஆச்சிரமத்திற்கு வழங்கியுள்ளது.

இது விடயத்தில் யாழ். மில்க்வைற் நிறுவனமும் ஒத்துழைப்பு வழங்கும். [செ-உ]

## தமிழ் நாடக விழா நடத்த முடிவு

(வெள்ளவத்தை)

தமிழ் நாடகங்களின் வளர்ச்சியைக் கருதி கொழும்பில் தமிழ் நாடக விழாவொன்றை மத்திய வங்கி தமிழ் இலக்கிய மன்றம் நடத்த முடிவு செய்துள்ளது. ஒரு மணித்தியாலத்திற்குள்ளாக நடிக்கக்கூடிய நாடகங்களை மன்றம் கோரியுள்ளது.

நாடக விழாவில் தெரிவு செய்யப்படும் மூன்று நாடகங்களுக்கு பணமாக பரிசில்கள் வழங்கப்படும். (அ)

## வீட்டில் டைனமைட்! ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

பத்தாயிரம் ரூபா பெறுமதியான டைனமைட் மற்றும் இது சம்பந்தமான திரிகள், மருந்துகள் ஆகியவற்றை யாழ்ப்பாணம் பொலிசார், வண்ணார்பண்ணையில், ஒரு வீட்டிலிருந்து கைப்பற்றினர். இது சம்பந்தமாக ஒருவர் கைதுசெய்யப்பட்டார்.

யாழ்ப்பாணப் பொலிஸைச் சேர்ந்த உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் விஜயரத்ன தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டியே டைனமைட்டைக் கைப்பற்றியது. இப்பொலிஸ் கோஷ்டியில் கான்ஸ்டபிள்கள் ரி. அர்ச்சுனன், ராசதுரை, சார்ஜன்ட் ஜேசுதாசன் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர் கைது செய்யப்பட்டவர், நேற்று மாஜிஸ்திரேட் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டார்.

## உயர் கல்வி பெற லண்டன் சென்றுர்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரியைச் சேர்ந்த செல்வன் ச. இரவீந்திரன் தொழில் நுட்ப விஞ்ஞானத் துறையில் உயர் கல்வி பெறும் பொருட்டு லண்டன் பயணமானர்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பழைய மாணவரான இவர், பிரபல சமூக ஊழியரும் ஆசிரியர் தொழிற் சங்கப் பிரமுகரும். சாவகச்சேரி இந்துக் கல்லூரி கனிஷ்ட அதிபருமான திரு. கு. சங்கரப்பிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வருவார். (அ)

## வற்ருப்பளை அம்பாள் உற்சவம்

[யாழ்ப்பாணம்]

வறருப்பளை கண்ணகி அம்பாள் கோவில் மஞ்ச உற்சவமும், கண்ணகி விழாவும் அடுத்த திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. இவ்விழாவினை யொட்டி அன்றைய தினம் "கண்ணகி அம்பாள் கருணை மலர்" வெளியிட்டு வைக்கப்படும். இம்மலரினை மெய்கண்டான் தொழிலதிபர் திரு தா இரத்தினசபாபதி வெளியிட்டு வைப்பார்.


# அரசன் கொம்பனி

(கொழும்பு-11, 72A, நாலாம் குறுக்குத் தெரு)

ஸ்தாபனத்தின் ஆதரவில்

## மாபெரும் மாட்டு வண்டில் சவாரிப் போட்டி

எதிர்வரும் தமிழ்ப் புத்தாண்டை முன்னிட்டு

நீர்வேலி முற்றவெளி மைதானத்தில்

மாபெரும் மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி

ஏப்பிரல் 15-ந் திகதி சனிக்கிழமை (15-4-78)

பி. ப. 2 மணியளவில் ஆரம்பமாகும்

இரட்டை மாட்டு வண்டில் சவாரி

பிரிவுகள் A, B, C.

ஒற்றை மாட்டு வண்டில் சவாரி

கட்டுப்பணம் ரூபா 10/-

மத்தியஸ்தரின் தீர்ப்பே இறுதிமுடிவாகும் என்பதை அறியத்தருகின்றோம்

விபரங்களுக்கு:-

ச. விக்னேஸ்வரராசா (விக்கி), புன்னாலைக்கட்டுவன் தெற்கு



இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி 65-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1978-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 5-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box No. 49, Jaffna. Telegram Eelanadu. Telephone 389, Registered as a Newspaper in Srilanka